
# நினைவலைகள் கூறுவதென்ன ?



37 Holloway Road
Markham ON

## நா. கணேசன்

நினைவலைகள் கூறுவதென்ன ?

# நினைவலைகள் கூறுவதென்ன?


நா. கணேசன்

905 836 - 7754

வெளியீடு

ஜெயபாரதி அறக்கட்டளை

தலைப்பு : நினைவலைகள் கூறுவதென்ன?
தொகுப்பு : நா. கணேசன்
பதிப்பு : © 2009
வெளியீடு : ஜெயபாரதி அறக்கட்டளை
33 - 42, Pinery Trail, Scarborough, ON, M1B 6H9,
Canada.
அச்சு : குமரன் அச்சகம்
B 3 , G 3, ரம்யா பிளேஸ், கொழும்பு - 10.
T.P. 011 242 1388, E.mail: kumbhlk@gmail.com



## சமர்ப்பணம்

கலைவாணியாக வந்து எம்மை மகிழ்வித்து
இருபத்தாறு வருடங்கள்
சகலகலாவல்லியாக வாழ்ந்து மறைந்த
**செல்வி ஜெயபாரதி கணேசபிள்ளை**
அவர்களின் திருப்பாதங்களுக்கு

## உள்நுழைந்து நயத்த ஒரு பார்வை

சரஸ்வதி கடாட்சம் பெற்று கல்வியிலும் தொண்டர் சேவையிலும் கனடாவில் பேரோடும் புகழோடும் வாழ்ந்த அருமை மகள் செல்வி ஜெயபாரதியின் திடீர் மறைவை ஒட்டி ஆசிரியர் திரு நா.கணேசபிள்ளை அவர்களால் இரண்டாவது வருட அஞ்சலி தினத்தன்று இந்நூல் வெளியிடப்படுகிறது.

ஆசிரியர் காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். முற்றும் துறந்த ஞானியர் தொடக்கம் மண்மீட்புப் போராளிகள் வரை சகல துறைகளிலும் மிகப்பிரபலங்களாக விளங்கிய மக்கள் பலருள், கல்வித் தகைமை முதலியவற்றில் மேம்பட்டு விளங்கிய கணேசனையும் தனது மைந்தன் எனக்கூறுவதிலும் பெருமையடைவது அவ் ஊர். கல்வியும் தன்னிறைவும் கொண்டு குணநலத்தால் உயர்ந்துநின்ற ஒரு குடும்பத்தின் வாரிசாக விளங்கியவர் இவ்வாசிரியர்.

உயிரிழப்புகள் வகைதொகையின்றி இனப்படுகொலைகளாக நிகழ்ந்து கொண்டிருந்த காலத்தில் காலனின் கண்ணைக்கட்டி ஒளித்தோடித் தமது புத்திரரைப் புகலிடங்களில் வசதியாக வாழவைத்துக்கொண்டிருந்தனர் ஒருசிலர். ஆனால் காலனை வென்றவர் யார்?. வாகன விபத்தாக, தற்கொலையாக, அபூர்வ நோயாக, கொலைவெறியாக, பழிவாங்கலாக, இன்னமும் பலவழிகளில் இளைஞர்களைக் கவர்ந்து செல்கிறான்.

பழந்தமிழர் வாழ்விலே, மக்களால் நேசிக்கப்பட்ட ஒரு மன்னன், அல்லது போர்க்களத்தில் பகைவனோடு பொருதி வெற்றிகண்ட மறவன் மரணம் அடைந்துவிட்டால் அவர்களுக்கு நடுகல் நாட்டி வரலாறு எழுதி வணங்கிவரும் பண்பாடு தொன்றுதொட்டு இருந்துவந்தது. எழுத்துக்கள் கல்லிலே பொறிக்கப்பட்டமையால் கல்வெட்டு எனவும் பெயர்பெற்றது.

நீண்டகாலத்துப் பண்பாடான நடுகல் நாட்டுதல் இன்றுவரை ஏதோ ஒருவகையில் நிலைபெற்று வருகிறது. காலம், தேசம், சூழல் மாற்றங்களால் சிலமாற்றங்களை ஏற்றுக்கொண்டு வாழ்கிறது. அச்சு

யந்திரம் வந்தபின் இறந்தவரின் படத்தைத்தாங்கி கவிதைரூபத்தில் அவரது வரலாறும் தொடர்ந்து “மனைவி புலம்பல், மக்கள் புலம்பல், பாட்டன் புலம்பல்” என பல உடனடி உறவினரின் புலம்பல்களைக் கோர்த்து வரும் இப்பாடல்களைப் பாடுவதற்கே கல்வெட்டுப் பாடகர் இருப்பார்.

இதன் பின்னர் சிறிது நாகரீகமாக தேவார திருவாசகப் பதிகங்களை அல்லது 12 திருமுறைகளிலும் தெரிவுசெய்த தோத்திரப் பாடல்கள் வெளிவந்தன.

மேலும் கூர்மையடைந்து படம், அதன்கீழ் இறந்தவருடம், மாதம், திதி உள்ளடக்கிய ஒரு நன்னெறி, நல்வழி, ஆத்திசூடி, திருக்குறள் போன்றவை நீதிநூல் கோவையாகச் சமுதாய நலன் நோக்கில் புறப்பட்டன. அடுத்த பரிமாணமாக இலக்கியக் கட்டுரைகள் பாடல்கள் போன்றனவும் வம்ச விருத்தி-முதலியாரிலிருந்து தொடங்கி இறந்தவர்வரை(பரம்பரை மரம் கீறி) வருகின்றது.

முதன் முதல் திரு.கனகசெந்திநாதன் அவர்கள் தமது ஒரேயொருமகள் இளமங்கை இறந்தபோது, இதுவரை அச்சேறாது இருந்த கவிஞர் மு.செல்லையாவின் கவிதைகளைத் தொகுத்து நினைவஞ்சலியாக வெளியிட்டார். அறுபதுகளில் இப்படியானவை வெளிவரத் தொடங்கின.

“குருமோகன் பாலர் பாடல்கள்”, “சக்திநெறி அறநெறிப்பா மஞ்சரித் திரட்டு”, “பஞ்சாட்சரம்” எனும் சித்தவைத்திய நூலிலிருந்த கைமருந்து விடயங்கள் போன்றன. “நினைவலைகள் கூறுவதென்ன” எனும் நூலும் கணேசனின் சில அனுபவக் கட்டுரைகள்- ஆழமாகப் பதிந்து அன்று போல் இன்றும் அழியாச் சிந்தனைகளாக உள்ள ஐந்து கட்டுரைகளை முதன்மைப் பகுதியாகவும், தமது அருமைப் புதல்வி ஜெயபாரதியின் வரலாற்று நிகழ்வுகளை ஒரு தந்தையின் அனுபவத்தோடு கூடிய பார்வையை இரண்டாம் பகுதியாகவும் தொகுத்து நம்முன் படைத்திருக்கிறார்.

ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் பற்பல விலக்கமுடியாத அனுபவங்கள் நிகழந்திருக்கும். அவற்றில் சில இன்பமானதோ துன்பமானதோ அழியா நினைவுகளாகி உள்ளத்தில் பதிந்துவிடும். சுவை இடைக்கிடை எட்டிப் பார்த்து முதுகில் தட்டிக் கொடுக்கும். அல்லது கண்ணீரை வரவழைக்கும். சில தீவிரமாகச் செயற்படத்தூண்டும்.

கணேசன் விரித்துள்ள களம் எமக்குப் புதியதல்ல. அதனால் அவர் எவ்வளவு சித்த சுத்தியோடு நேர்மையாக எதுவித புனைவுமின்றி எழுதியுள்ளார் என்பதைப் புரியவைக்கின்றது. ஐந்து நிகழ்வுகளூடேயும் ஒரு உளவியல் தத்துவம்-சிந்தனை வளர்ச்சி ஊடுபாவாகத் தொழிற் படுவதைக் கண்டேன். இப்படி ஒன்றன் பின் ஒன்றாகத் தொகுப்பதற்கு ஏதாவது வழிமுறைகளைக் கையாண்டீர்களா எனக்கேட்டபோது, சிறு பிள்ளைக்குரியதை முதலில் போடுவோம் என்பதைத் தவிர வேறொன்றுமில்லை, ஒன்றையும் தெரிவு செய்து போடவில்லை. இவை ஐந்தும் தான் நினைவின் முன்னுக்கு வருவன என்றார்.

உளவியல் ஆய்வில் ஒரு மனிதனின் வளர்ச்சிப்படிகள், சிந்தனை விரிவாக்கம் என்பன படிமுறையாக செல்வதை அவதானிக்கலாம். உளவியல் என்பது மனிதனின் நடத்தைக் கோலங்களை நான்கு வகையில் ஆராய்வது உடல்ரீதியாக, உளரீதியாக, சமூகரீதியாக, கலாச்சாரரீதியாக இதற்காகப் பல்துறை விற்பன்னர்கள் தத்தம் கொள்கைகளை நிலை நாட்ட ஆளுமைகளை அறிய ஆய்வுகளை நடாத்தியுள்ளனர். கார்ள் யங், ஷெல்டன், சிக்மன்ட் புறோயிட், W.தோமஸ், ஏபிரகாம் மாஸ்லோ, எறிக் எறிக்சன், பவ்லோவ், B.F. ஸ்கின்னர் எனப் பல ஆராய்ச்சியாளர்களும் நான்குவிதமான விருத்திகளையும் வகுத்து, ஓரளவு வயது அடிப்படையுமிட்டார்கள். ஒருசிலர் சூழல் மாற்றத்தால் சராசரிக்கு உயர்வாகவோ அல்லது தாழ்வாகவோ இருக்கமுடியும். அடிப்படைத் தேவைகள் பூர்த்திசெய்யப்பட்ட குடும்பத்தில் அடுத்ததேவை சிறு வயதிலும் தோன்றக்கூடும் எனப்பட்டது. எனவே இக்கதைகள் படிமுறை வளர்ச்சியின் பரிணாமமாகத் திகழ்கின்றன எனக் காணப்படுகிறது.

முத்லாவது கதை "*கற்பகப் பாட்டியுடையது*". ஆசிரியருக்கு 5-10 வயது இருக்கலாம், கதைகேட்கும் பருவம், அந்த வயதுகளுக்கேற்ற சொல்லாட்சி, நகைச்சுவை, அக்கால சொல்வழக்குகள் பெத்தாச்சி, சாணம், பனம்பண்டங்கள் இவை அறிமுகப்படுத்தப்படுகின்றன. கிராமங்களில் வறுமை இருக்காது. பனம்பண்டங்களும் இலை, குழை காய், கனி, கிழங்கு வகை யாருக்கும் கிடைக்கும். அதனால் மக்களின் அடிப்படைத் தேவைகளும் பூர்த்திசெய்யப்படுகின்றன. எனவே மக்களின் திருப்தியான வாழ்க்கை அவர்களின் உயர்வுக்கு வழிகோலுகின்றன. படம் பார்த்த பாட்டிக்கு அறிவு கிடைத்திருக்கிறது. அதைத் தன் கதை சொல்லும் பணிக்குப் பயன்படுத்திக் கொண்டார்.

நல்லதொரு முடிபு பெற்ற அறிவைச் சமுதாயத்துக்குப் பயன்படுத்துதல் எனும் குறிக்கோளும் சிறுவருக்கு வைக்கப்படுகிறது. சிறு வயதுக்

கதை அப்படியே நினைவில் நின்றதோ அல்லது சிறுவருக்கேற்றதான நடையில் எழுதினாரோ அறியோம். ஆயினும் சிறந்த முறையில் கையாளப்பட்டிருக்கிறது.

அடுத்த கட்டுரை "*நீ தான் எனது முதல்தர மாணவன்*" ஆசிரியரின் பதின்மவயதுக் கட்டிளமைப்பருவம் அதற்கே உரிய இலட்சியங்கள் வகுக்கப்படும் நேரம்; உலக ஆசாபாசங்களுள் அகப்படாமல் அறிஞர் பெருமக்களின் கொள்கைகளில் ஈடுபாடு கொள்ளல், அதேபோலத் தாமும் வாழவேண்டும் என விரும்புதல் போன்ற அறநெறிசார் வாழ்வினைப் பிரதிபலிப்பது. அத்தோடு வீட்டின் சூழலும் பொய், களவு, சூதுகள் அற்ற ஒழுக்கசீலர்களாக-கல்விக்கூடமோ இலட்சிய வாசகமாகிய "*நேர்மை நெறி நில்*" எனக் கூற அந்தச்சூழலில் வாழ்ந்த ஒருவன் இவன். தொடர் வண்டியில் யாரோ விட்டுப்போன பையை எடுத்துப் பார்க்கிறான் 3000 ரூபாக்கட்டும் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவு சமாசம் என எழுதப்பட்ட காசோலைப் புத்தகமும், காங்கேசன்துறையில் கண்டெடுத்த பையை வெகு சிரத்தையோடு உடனேயே அங்கு கொண்டு கொடுக்கிறான். சமாசத்தின் தலைவர் ஒரு ஆசிரியர். அவரிடம் புகழுரைகளையும் கேட்கிறான். ஊழியர் பலர் கைதட்டி வரவேற்று ஆரவாரப்பட்டது, இன்றும் அழியாக் கோலமாய் ஒரு பெரும் சாதனையாய் நினைவில் வந்து முதுகில் தட்டிப் பாராட்டப்படுகிறது.

பதின்ம வயதில் லேசாகக் கால்கொண்ட இலட்சியங்கள் உறுதி பெறுங்காலமாக அடுத்த பருவம் செயற்படுகின்றது. 20-30 வயதில் இவர் கண்டியில் பொருட்காட்சி கூடம் ஒன்றைப் பார்க்கப் போகிறார். கணிதம், விஞ்ஞானம் எனப் பெற்ற கல்வி, பொருட்காட்சியோடு தமிழனின் ஆட்சி, தமிழினம், தமிழ் எனும் உத்வேகத்தைக் கொடுக்கிறது.

புராதன சின்னங்களூடாகவும் எழுதப்பட்ட விடயங்களூடாகவும் தமிழின் தொன்மை பற்றிய அபிப்பிராயங்கள் ஆழப்பதிகின்றன. தமிழ்மீதும் தமிழினத்தின் மீதும் பற்றும், மதிப்பும் பெருமையும் சேர்கின்றன. ஆழ்ந்த சிந்தனை மூலம் தமிழ் உணர்வு உரம் பெற்றதால் இறுதிக்காலம் வரை தமிழனின் அடையாளத்தை மறக்கவோ அல்லது இழக்கவோ முடியாத தீவிரம் தோன்றும். சில வருடங்களின் பின் (21 வருடம்) தமது மாணவரையும் அழைத்துக்கொண்டு சுற்றுலா செல்கிறார். தமிழன் செங்கோலாற்றிய காலத்தைக் காட்டவேண்டுமெனப் போனபோது, அவ்வடையாளங்கள் அழிக்கப்பட்டும் சிதைக்கப்பட்டும் மறைக்கப்பட்டும் மாற்றப்பட்டும் கிடக்கின்றன. திட்டமிட்ட முறையில் நடாத்தப்பட்ட இச்செயல் ஆசிரியருக்கு மிகுந்த ஆத்திரத்தையும்

வெறுப்பையும் ஏற்படுத்துகிறது. அப்போது 40-45 வயதிருக்கலாம். எனவே தமிழர் அனைவரையும் நோக்கி அழிக்கப்பட்ட வரலாற்று ஆதாரங்களைத் தேடி எடுக்க தமிழர் ஒவ்வொருவரும் வரலாற்று ஆய்வாளராக செயல்பட வேண்டும் என அறிவுறுத்துகிறார்.

உண்மைகள் எரிக்கப்படுவதில்லை

எண்பதுகளில் யாழ் நூலகம் எரிக்கப்படுகிறது.ஆம்! அறிவுக் களஞ்சியம். நூலகமே கதியெனக் கிடந்தோர் பலர் தத்தம் உயிரையே பிடுங்கி எறிந்ததுபோல்- தம்வீட்டிலேயே ஒரு இழவு விழுந்தது போல் துவண்டு போயிருந்தனர். ஆசிரியர் ஒரு காரணம் கூறினார். தனிச்சிங்கள மசோதாவின் விவாதம் 1956 ஆம் ஆண்டு நிகழ்ந்த போது ஜே.ஆருக்கும் ஜி.ஜீக்கும் நடந்த வாதத்தின் போது உம்மால் நாம் பொய்யர் என நிரூபிக்க முடியுமா? என ஜே.ஆர் கேட்டபோது, "உங்கள் பொய்யுரைகளை வெளிப்படுத்தக்கூடிய சான்றுகள் நிறையவே யாழ் பொதுசன நூலகத்தில் பாதுகாப்பாக இருக்கின்றன" என்றார் ஜி.ஜி. (பாராளுமன்றப் பதிவேட்டில் இருப்பதாகக் கூறுகின்றார் ஆசிரியர்) இதன் தொடர்பாகத்தான் திட்டமிட்டு நூலகத்தை எரியூட்டினர் என்கிறார். அவர் உள்ளம் துடிக்கிறது. தானும் முயல்கிறார், அதேநேரம் மாணவரைப் பார்த்து நவீனத்துவமான விஞ் ஞான முறைகளைக் கையாண்டு தமிழரின் வரலாறு பற்றி சரியான ஆய்வுகளைச் செய்யுமாறு கோரிக்கை விடுக்கிறார்.

கல்வி நிறுவன மொன்றின் திட்டமிட்ட ஆக்கிரமிப்பு எனுங் கட்டுரை. இந்நிலை உளவியலின் தேவைக் கொள்கைப்படி அதி உன்னத நிலையாகும். இது வரை தமது அறிவை வளர்த்தல் ஒரு கணிப்பைப் பெறுதல், மற்றவர்கள் தம்மை மதிக்கத்தக்கதாக நடத்தல் எனும் நிலைகளைக் கடந்து உலகுக்காக- சமூகத்துக்காகத் தன்னுயிரையும் பொருட்படுத்தாது உதவி செய்யும் உயர்நிலை, தனக்கென வாழாப் பிறர்க்குரியனாக வாழும் தன்மை.

ஒரு கல்லூரியின் அதிபர், கல்லூரி இராணுவ ஆக்கிரமிப்புக் குட்பட்டபோது பாடசாலை ஊழியரையும் மாணவர்களையும், கவலைப்படும் பெற்றோரையும் காப்பாற்ற ஆசிரியர் தாம் எடுத்த முயற்சிகளைக் கூறுகிறார்.

இந்த அச்சமற்ற தன்மையை இன்னொரு கல்லூரியில் நடந்ததை நினைப்பதன் மூலம் எத்தகைய ஆபத்துக்களைக் கடந்து வந்திருக்கிறார் என்பது புலப்படும். வீமன்காமம் மகாவித்தியாலய அதிபர், தகுந்த உத்தரவுகளை முறையாகப் பெற்று வெள்ளைக் கொடியோடு உதவியாளர்

இருவருடன் வீதியில் நடந்து கொண்டு போகும் போது அரை மைலுக்கு அப்பால் வரும்போதே அவரைச் சுட்டுக் கொன்றுவிட்டார்கள். இவர் தப்பி வந்தமை இறைசெயல் என்றுதான் கூறவேண்டும்.

இந்த அனுபவங்களூடாக, தற்போது அவர் மக்களுக்கும் பழைய மாணவர் சங்கங்களுக்கும் ஒரு விண்ணப்பத்தை முன்வைக்கிறார். பாடசாலையையும், நிவாரணமும் பெறுவதற்குமான ஆலோசனையைக் கூறி நிறைவு செய்கிறார்.

ஒருவர் வாழ்விலேயே படிமுறை வளர்ச்சியைக் கண்டோம். சூழ் நிலைக்கேற்ப இத்தன்மைகளும் மாறும் என்பதும் தெளிவு. தன்நிறைவோடு வாழ்ந்த காலத்துப் போர்க்காலத்தின் அடிப்படைத்தேவைகளே அதாவது நீர், உணவு, பாதுகாப்பு இல்லாமலே வாழுங் காலங்களும் எல்லாருக்கும் வந்தது போன்று ஆசிரியருக்கும் வந்திருந்தது.

அடுத்ததாக நூலின் இரண்டாம் பகுதிக்கு வருவோம். மூன்று மகள்களில் ஒருத்தியும் இளையவளுமான ஜெயபாரதியின் உயிர், திடீரெனக் கொடுங்கூற்றினால் அபகரிக்கப்பட்டதால் ஏற்பட்ட துயரத்தினூடே அவளது வாழ்க்கை பற்றிய ஒரு தந்தையின் பார்வையாக மிளிர்கிறது "தெய்வப்பிறவி" எனுங் கட்டுரை.

அவளுக்கு 13 வயதில் கனடாவந்து இந்தச் சூழலில்-கல்வியில் தம்மை அனுசரித்துக் கொள்ள ஏற்பட்ட சிரமங்களையும், தொடக்கத்தில் சோர்வு காணப்பட்டாலும் பின்னர் வீரநடைபோட்டு யாவரும் வியக்கும் வண்ணம் கல்வியில் உச்சநிலையைப் பெற்றதும், சமூகத்தில் நடக்கும் போட்டிகளில் கலந்தும், தாய் நாட்டுக்கான சேவைகளில் உளம் ஈடுபட்டு தொண்டர் சேவையை ஆர்வமாகச் செய்தமையும் அதனால் ஏற்பட்ட பூரிப்பையும் கூறுகிறார்.

மேலும் கலைகளிலும் ஓவியம், வீணை முதலியவற்றில் நல்ல பயிற்சியும், நிறைந்த இறைபக்தியும், உறவினரை அன்பு செலுத்திப் பேணும் தன்மையும் இங்கே பெறப்படுகிறது. "தெய்வப்பிறவி" என்பதற்கு அவர் காட்டும் சான்றுகள் நிச்சயமாகவே தெய்வத்துவம் நிறைந்த உள்ளம் உடையார் என்பது சான்றாகின்றது. அவளுடைய அறநெறி சார்ந்த பண்புகள், பெற்றோரை வணங்குதல், பிறரையும் தன்னைப்போல் நேசித்தல், இறைபக்தி, கலாசாரப் பேணுகை, நலிந்த வர்க்கு உதவிசெய்யும் அன்பும் இரக்கமும் கொண்ட குணம் அத்தனையும் இளைஞர்களுக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளன. அதனால் தந்தை அவளைத் தெய்வப்பிறவியாகக் கணித்துத் தன்னைத் தானே தேற்றிக் கொள்கிறார்.

இன்று தறிகெட்டுத் தெருப்பொறுக்கிகளாகத் திரியும் இளைஞர்களுக்கும், சரியான வழிகாட்டிகளாக, விளங்காத பெற்றோருக்கும் இந்த வரலாறு அறிவைப் புகட்டும் என நம்பலாம்.

நம்நாட்டிலே இந்நூலாசிரியரின் கல்வித்தகைமையும் தொழிற்றகமையும் சமூகத் தொடர்பாடலும் ஓரளவு உணரப்பட்டிருந்தது. புதியதொரு நாட்டுக்குப் பெயர்க்கப்பட்டபின் அந்நியப்பட்ட தன்மையைப் போக்க, மீண்டும் துளிர்க்கவேண்டி ஏற்பட்டது. தன் செயல்களால் மட்டுமல்ல "இவள் தந்தை எந்நோற்றான் கொல்" எனும் தருக்குடன் தலைநிமிர்ந்து வாழ வைத்துக் கொண்டிருந்த அச்செல்வமும் பறி போனநிலையில் ஆற்றொணாத துயரத்தைக் கரைந்து கரைந்து காணாமல் போகாது, ஆக்கவழியில் செலுத்தும் ஊக்கம் தொழிற்பட்டது. பால்யத்தை அசைபோட்டு முத்தான அனுபவங்களை எழுத்தில் பதிக்க முயன்றுள்ளார். துயிலாத கண்களிலிருந்து எழுத்தாளன் ஒருவன் பிறந்துவிட்டான்.

அவருடைய எழுத்துக்கள் சமூகத்துக்கு வழிகாட்டியாக அமையும் என்பது திண்ணம். காலம், அவர் சிந்தனைகளை எழுத்தாக வடிக்கும் ஆற்றலை விருத்தியடையவைத்து அவருக்கும் அவர் குடும்பத்துக்கும் ஆறுதலையும் தேறுதலையும் கொடுக்க வேண்டுமெனப் பிரார்த்திப்போமாக. குலதெய்வம் குருநாதன் வேண்டும் வரங்களை அளிப்பாராக.

*வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்)*

*'திருப்தி'*
*கல்லூரி வீதி*
*காங்கேசன்துறை*
*2009*

# நூன்முகம்

எமது பிள்ளைகள் எதிர்காலத்தில் எத்தகைய முடிவுகளை எடுக்க வேண்டும், என்பதில் நாம் சற்று ஆழமாகச் சிந்திக்க வேண்டியுள்ளது. எனது வாழ்வில் ஏற்பட்ட சில அனுபவங்கள் அவர்களுக்கு உதவியாக இருக்கும் என நினைக்கிறேன். நான் ஒரு எழுத்தாளன் அல்ல. சில சம்பவங்கள் எவ்வாறு என்னைப் பாதித்தன என்பதை எடுத்துக் கூறுவதற்கு முறப்படடேன். அதன் விளைவு தான் இக்கட்டுரைகளின் தொகுப்பு.

புலம்பெயர்ந்து வாழும் எம்மவர்கள் தமது பிள்ளைகளின் அறிவுப் பசியைத் தீர்க்கத் தவறிவிடுகின்றனர். தாய் மொழியைப் பேசவும், எழுதவும், வாசிக்கவும் நாமே அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும்.

எமது தாய் நாடு எது? அது எங்குள்ளது? அங்கு என்ன நடக் கிறது? போன்றவற்றைத் தாமே தேடி அறிதல் அவசியம். இன்றைய நவீன உலகில் தொழில்நுட்ப வசதிகளும், ஆய்வு முறைகளும் பல்கிப் பெருகிக் காணப்படுகின்றன. அவற்றைச் சரியாகப் பயன்படுத்தி சுயமாக முடிவுகளை எடுப்பதற்கு நாமே அவர்களை வழிநடத்தவேண்டும்.

இலங்கையில் தமிழர் எப்படி வாழ்ந்தார்கள் என்பதை மட்டுமல்லாமல் இலங்கையின் பெறுமதிமிக்க ஆவணங்கள் எங்கெல்லாம் பாதுகாக்கப் படுகின்றன என்பதை ஆராய்ந்து தொகுத்துத் தந்துள்ளார் கலாநிதி முருகர் குணசிங்கம். அவரை தமிழைப் போற்றும் உலகம் என்றும் பாராட்டும்.

இலங்கை பற்றிய மாயைகளையும், புனைக்கதைகளையும் உடைத் தெறிந்து உண்மையை நிலைநாட்டுவது எமது இளைய தலைமுறையைச் சார்ந்ததாகும். தற்கால நிலையைப் புரிந்துகொண்டு தமிழ் மாணவர் ஒவ்வொருவரும் ஓர் ஆய்வாளராக மாறவேண்டும். வேற்று மொழி களில் பாண்டித்தியம் பெற்றவர்கள், அம்மொழிகளிலும் எமது கடந்த கால வரலாற்றையும், அண்மைக்கால வரலாற்றையும் உலகுக்கு இடித் துக்கூறவேண்டும். இதற்காக எமது பெற்றோரும் பெரியவர்களும்

அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து உதவவேண்டும் என்று இரு கரம் கூப்பி வேண்டுகிறேன்.

ஒரே வீதியில் வாழ்ந்து ஒரே கல்லூரியில் கற்றுவந்தவன் என்ற வகையில் குருநாதர் சுவாமி கோவிலையும் வள்ளிநாயகி அக்காவையும் குருவீதியில் வாழ்ந்த ஒவ்வொரு வீட்டுக் குருபரம்பரையினரையும் மீண்டும் மீண்டும் நினைக்கும் போதெல்லாம் ஒரு விதபுத்துணர்ச்சியைப் பெறுகிறேன். அக்கால நினைவுகள் என்றும் பசுமையானவை. உள்ளத்தைத் தொடும் வகையில் ஆய்வு செய்த வள்ளிநாயகி அக்காவிற்கு எனது இதயபூர்வ நன்றிகள்.

*நா.கணேசபிள்ளை*

*2009*

# பகுதி I

# 1
# பாட்டி பார்த்த முதல் சினிமா படம்

பனை மரங்களுக்கு நடுவே ஒரு குடிசை. அதில் வயது முதிர்ந்த ஒரு பாட்டி வாழ்ந்து வந்தாள். கற்பகம் என்பது அவள் பெயர். வயது முதிர்ந்தபடியால் அவளது உடல் கூனிப்போய்விட்டது. எப்போதும் ஒரு பொல்லுத் தடியுடன் தான் செல்வாள். அந்த ஊரில் கற்பகத்தை அறியாதவர்கள் இல்லை.பாட்டியை பெத்தாச்சி எனவும் அழைப்போம்.

அரசாங்கம் கொடுக்கும் உதவிப் பணத்துடனும் பனையின் செல்வத் துடனும் தனது வாழ்க்கையை ஓட்டினாள். பசு மாடுகளும் கன்றுகளும் கற்பகப் பாட்டியின் செல்லப் பிள்ளைகள். மாடுகளின் சாணத்தை சேகரிப்பாள். அதனை விற்றுப் பணம் பெறுவாள். பனை ஓலைகளில் இருந்து வண்ண வண்ணப் பெட்டிகள் செய்வாள். ஒடியல்மா பனாட்டுப் போன்ற உணவுப் பொருட்களும் அவளிடம் எப்போதும் இருக்கும். ஊர் மக்களுக்குக் கற்பகப் பாட்டி மீது அளவு கடந்த பாசம். ஏன் என்றால் பனம் பொருட்களை அவர்களுக்கு மிகவும் மலிவாகக் கொடுப்பாள்.

மாலதி கற்பகப் பாட்டியின் பேத்தி. தன் வீட்டில் சமைக்கப்படும் உணவில் ஒரு பகுதியைப் பாட்டிக்குக் கொண்டுவந்து கொடுப்பாள். மாலதிக்குக் கதை கேட்பதில் நல்ல விருப்பம். பாடசாலை முடிந்ததும் பாட்டியின் குடிசைக்கு வந்துவிடுவாள். பாட்டியின் குடிசையைத் துப்பரவு செய்வாள். நீர் கொண்டுவந்து பெரிய பானையை நிரப்பு வாள். காய்ச்சிய பாலும் பனங்கட்டியும் மாலதிக்கு நல்ல விருப்பம். கற்பகப்பாட்டி மாலதிக்குப் பல நீதிக் கதைகளைக் கூறுவாள். ஔவை யாரின் கதையையும் பாடல்களையும் விரும்பிக் கேட்பாள்.

அந்த ஊரின் பெருந்தெருப் பக்கமாக ஒரு கூடாரம் அமைத்து, சினிமாப்படம் காட்டி வந்தார்கள். பலர் படம் பார்த்த செய்தி மாலதிக்கும் தெரிந்தது. கற்பகப் பாட்டிக்கும் இதனைக் கூறினாள். பாட்டி இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. மேடைபோட்டு கூத்து நாடகம் நடைபெறுவதையே பாட்டிபார்ப்பாள்.

பட்டணத்தில் பெற்றோருடன் சில சினிமாப் படங்களை மாலதி பார்த்திருக்கிறாள். பாட்டிக்கு இதனைச் சுவையாக எடுத்துக் கூறினாள். ஒளவையார் படம் காண்பிக்கப்படுகிறது என்ற செய்தி ஊரெல்லாம் பேசப்பட்டது. பாட்டிக்கும் படம் பார்க்க ஆசை வந்துவிட்டது.

பாட்டி ஒரு நாளும் சினிமாப் படம் பார்த்ததில்லை. பாட்டியை எப்படியாவது இப்படக்காட்சிக்குக் கூட்டிச் செல்லவேண்டும் என்று விரும்பினாள் மாலதி. தினமும் மாலதி தான் அறிந்த காட்சிகளைச் சுவைப்பட பாட்டிக்குக் கூறினாள். பாட்டிக்கும் "ஒளவையார்" படத்தைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் மனதில் உதித்தது. ஒரு நாள் மாலதி, மாலதியின் குடும்பம், பாட்டி, அயலில் உள்ளவர்கள் சிலர் ஒன்று கூடி "ஒளவையார்" படம் பார்க்கச் சென்றார்கள்.

படக்காட்சி நடைபெறும் கூடாரத்தைச் சென்றடைந்தனர். உள்ளே சென்றதும் பாட்டிக்கு ஒரே வியப்பு. மாலதியை நோக்கி "இதென்னடி பெரிசா வெள்ளைச் சேலை கட்டியிருக்கு" என்றாள் பாட்டி. அதிலை தான் படம் ஓடும் என்றாள் மாலதி. இப்படியே பல கேள்விகள் கேட்டாள் பாட்டி. தனது ஆறாம் வகுப்பு அறிவைக் கொண்டு விளக்கம் கொடுத்தாள் மாலதி. பாட்டிக்கு இருக்க முடியவில்லை. துருவித் துருவிப் பல கேள்விகள் கேட்டுக் கொண்டே இருந்தாள் மின் விளக்குகள் அணைந்தன.

"இதென்னடி ஒரே கும்மிருட்டாய் இருக்கு" என்றாள் பாட்டி. பாட்டி தன்னையும் படம் பார்க்க விடமாட்டாள் என்று எண்ணி "சும்மா இரணை" என்று மாலதி பாட்டியை அதட்டினாள். பாட்டி பேசாமல் இருந்தாள்.படம் ஆரம்பமானது. ஒளவையாரின் ஆரம்ப கால கட்டம் காண்பிக்கப்பட்டது. ஒளவையார் பிள்ளையாரைக் கும்பிடும் காட்சி வந்தது. உடன் பாட்டி எழுந்து நின்று "அரோகரா" என்று தலையில் குட்டிக் கும்பிட்டாள். பாட்டியை இருக்கச் செய்வதற்கு மாலதியின் பாடு பெரும் பாடாகிவிட்டது. பின்னால் இருந்தவர்கள் இதென்ன கிழவி சத்தம் போடுது, இதுதான் முதல் படமோ? என்றனர்.

பலரின் எதிர்ப்புக்கு மத்தியிலும், மாலதியின் இரகசியமான அறிவுரையிலும் பாட்டி ஒருவாறு அமைதியாக இருந்து படம் பார்த்தாள். எனினும் தனது சந்தேகத்தை இரகசியமாக மாலதியிடம் கேட்டாள். இவ்வளவு சனமும் இதற்குள்ளாலை எப்படி வருகினம்? என்றாள்.

யானைப்படை, குதிரைப்படை எல்லாவற்றையும் பாட்டிபார்த்து அசந்து போனாள். ஒரு நிலையில் மன்னன் பாரி குதிரையில் தலைக்கு மேலால் வருவது போல் இருந்தது.




கற்பகப் பாட்டி பயந்தேவிட்டாள். உடன் எழுந்து நின்றாள். "ஐயையோ வந்திட்டாங்களடீ" "என்ரை குடில் போச்சு" "எல்லாம் போச்சு" என்று பலத்த குரலில் ஒப்பாரிவைக்கத் தொடங்கிவிட்டாள்.

படம் பார்த்தவர்கள் பாட்டியைப் பார்க்க, ஏதோ அபாயம் என நினைத்துப் படம் நிறுத்தப்பட்டது. பலருக்கு வியப்பு. உண்மையை உணர்ந்து பின் அமைதியானார்கள். பாட்டிக்கு ஒன்றும் புரியவில்லை. வெட்கம் ஒருபுறம். மாலதி குடும்பம் எழுந்து வீட்டுக்கு போவோமா என்று யோசித்தார்கள்.

இடை நடுவில் படத்தைப் பார்க்காது திரும்ப மனம் வரவில்லை. தொடர்ந்து படத்தைப் பார்த்தனர். ஔவைக்கு முருகன் காட்சி கொடுத்த போது சத்தம் போடாது கைகளைத் தலையில் வைத்து அரோகரா என முணு முணுத்தாள் பாட்டி. முடிவில் வீடு திரும்பினர்.

அடுத்த நாள் எல்லோரும் கற்பகப் பாட்டியை வந்து பார்த்து "படம் எப்படி" என்று விசாரித்தார்கள். பாட்டி எல்லோருக்கும் ஔவையாரின் கதையைச் சுவையாகக் கூறினாள்.

## 2

# நீ தான் எனது முதல் நிலை மாணவன்

தனது புது வருட விடுமுறைக்காக வீடு நோக்கிப் புறப்பட்டான் கஜன். வெள்ளிமாலை பயிற்சிவகுப்புகள் முடிந்தபின் கண்டியில் இருந்து குருநாகலைக்குப் புறப்பட்டான். குருநாகலைக்கு வந்ததும் இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு காங்கேசன்துறைக்குச் செல்லும் இரவுத் தபால் வண்டிக்காக் காத்திருந்தான் கஜன்.

தபால் வண்டி வந்ததும் விரைவாக ஓடிச் சென்று மூன்றாவது பெட்டியில் ஏறினான். பயணிகள் கூட்டம் அதிகம் இல்லாததால் கைப்பையை தலைக்குக் கீழ் வைத்துவிட்டு அயர்ந்து நித்திரை செய்தான். நித்திரை வரவில்லை. அரச செலவில் பயிற்சிபெறுவதால் தனது முதல் மாத சம்பளத்தில் தாயாருக்காக ஒரு சேலையும் சகோதரனுக்கு ஒரு வேட்டியும் வாங்கினான். தாயாரின் சந்தோசத்தைப் பார்க்க ஆசைப் பட்டான். நினைவுகள் அலைமோதின.

எதிரில் இருந்த ஆசனத்திலும் வயதான ஒருவர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார். அவர் தலைக்குக் கீழேயும் ஒரு கைப்பை இருந்தது. புகைவ ண்டி அனுராதபுரத்தை அடைந்ததும் கஜன் அடுத்தநாள் ஆங்கிலத் தினசரியை வாங்கினான்.

சனிக்கிழமை என்றபடியால் பக்கங்கள் அதிகமாக இருந்தன. புதினத்தாளை வாசித்தபடி கஜன் நித்திரையாய் விட்டான்.

வண்டி பளை நிலையத்தை அடைந்தது. கஜன் எழுந்து சென்று முகம் கழுவிவிட்டு வந்தான். மீண்டும் புதினத்தாளைப் புரட்டினான். அப்போதும் பக்கத்தில் படுத்திருந்த பெரியவர் எழுந்திருக்கவில்லை. வண்டி யாழ்ப்பாணத்தை அடைந்தது. பெரும்பாலானவர்கள் வண்டியை விட்டு இறங்கிவிட்டார்கள். அதிகாலை என்ற படியால் வெளியே யன்னலினூடாகப் பல காட்சிகளையும் கஜன் பார்த்து ரசித்தான். எதிரில் இருந்தவரைக் காணவில்லை. சுண்ணாகத்தில் இறங்கியிருப்பார் என

நினைத்தான். வண்டி தெல்லிப் பழையைக் கடந்தபோதுதான் பெரியவர் இருந்த இடத்தில் அவரது கைப்பை இருப்பதைக் கண்டான். அந்தப் புகைவண்டிப் பெட்டியில் வேறு எவரும் இருக்க வில்லை. கடைசி நிலையம் காங்கேசன்துறை. வண்டி தனது பயணத்தை முடித்து ஓய்வுக்கு வந்தது. தான் கண்டெடுத்த கைப்பையைத் திறந்து பார்த்தான் கஜன். இரண்டு காசோலைப் புத்தகங்கள், மூன்று ஆயிரம் ரூபா நோட்டுக் கட்டுகள். அதிர்ச்சியினால் மனம் பேதலித்து நின்றான். காசோலைப் புத்தகத்தைப் புரட்டிப் பார்த்தான். பல்நோக்குக் கூட்டுறவுச் சமாசம், தெல்லிப்பழை என்று காணப்பட்டது. கஜனுக்கு எல்லாம் புரிந்து விட்டது.

பக்கத்தில் இருந்தவர் கூட்டுறவுச் சமாசத்தைச் சேர்ந்தவர். கைப் பையைத் தவற விட்டுவிட்டார். இப்பையை சிங்களவரான புகையிரத நிலைய அதிபரிடம் கொடுத்தால் பணமும் பெறுமதியான பத்திரங்களும் மறைந்துவிடும் என்பதை கஜன் உணர்ந்தான். எனவே அப்பையையும் எடுத்துக் கொண்டு தன்வீட்டிற்குச் சென்றான். நடந்தவற்றைத் தன் தாயாருக்குக் கூறினான். தனது மைத்துணரின் துவிச்சக்கரவண்டியை இரவலாகப் பெற்றுக்கொண்டு கைப்பையுடன் சங்கப் பணிமனைக்குச் சென்றான் கஜன். அங்கு எல்லோரும் கூட்டமாக நின்று பணப்பை தவறியதைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். உள்ளே சென்ற கஜன் சபா மண்டபத்தில் தலைவர் திரு. அம்பலவாணர் இருப்பதைக் கண்டான். இவர் கஜனின் ஆங்கில ஆசிரியர். தலைவருக்கு வணக்கம் கூறி தான் கொண்டு வந்த கைப்பையைத் தலைவரிடம் கொடுத்தான் கஜன்.

நடந்தவற்றை விபரமாக எடுத்துக் கூறினான் கஜன். தலைவர் பெரிதும் சந்தோஷப்பட்டு கஜனைக் கட்டித்தழுவி "எனது சிறந்த மாணவருள் முதல் தர மாணவன் நீ தான்" என்று பாராட்டினார். செய்தியைக் கேட்டு எல்லோரும் சபா மண்டபத்தில் கூடிவிட்டார்கள். தலைவரான ஆசிரியர் திரு. அம்பலவாணர் கஜனை எல்லோருக்கும் அறிமுகம் செய்தார். தான் கற்பித்த மாணவன் கஜன் இன்று இச் சங்கத்தைக் காப்பாற்றியுள்ளார். அவருக்கு எமது சமாசத்தின் சார்பில் நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறேன் என்றார். எல்லோரும் மகிழ்ச்சியோடு கைதட்டி ஆரவாரித்தனர். கஜன் ஆசிரியரிடமிருந்தும் ஏனையோரிடமிருந்தும் விடைபெற்றுக் கொண்டு வீடு திரும்பினான்.

# 3

# உண்மைகள் எரிக்கப்படுவதில்லை

1975 ஆம் ஆண்டளவில் யாழ் நூலகம் மிகச்சிறப்பாக இயங்கியது. பல மாணவர்கள் அதனைப் பயன்படுத்திக் கொண்டனர். கஜனும் தனது பட்டப்படிப்பிற்கு இந்த நூலகத்தை நன்கு பயன்படுத்தினான். பிரித்தானிய (British Council) நூல்கள் மட்டுமல்லாது, அமெரிக்க நூல்களும் இங்கு காணப்பட்டன. தெற்கு ஆசியாவில் மிகப் பெரிய நூலகமாகக் கருதப் பட்டது. பெருங்கல்விமான்கள் தாங்கள் சேகரித்தவற்றை ஆக்கியவற்றை எல்லாம் இந்த நூலகத்தில் பாதுகாப்பாக வைத்தார்கள். அண்ணளவாக ஒரு இலட்சம் நூல்கள் காணப்பட்டன. நெஞ்சில் சற்றேனும் மனித நேயமற்றவர்களால் 1981 இல் இப்பெரியநூலகம் திட்டமிட்டு எரிக்கப் பட்டது.

நூலகம் மட்டுமல்ல, எரிக்கப்பட்ட செய்தி வெளியே வராது தடுக்கும் முகமாக ஈழநாடு பத்திரிகைக் காரியாலயம் முன்னரே எரிக்கப்பட்டது. தமிழ் மக்கள் அதிர்ச்சியடைந்தார்கள். கஜனும் பெருங் கவலையில் மூழ்கிப் போனான். தமிழ் கூறும் நல் உலகமே அழுதது. எங்கும் ஒரே சோக மயம். யாழ் மக்கள் அதிர்ச்சியினால் உறைந்துவிட்டனர். அதற்குக் காரணம், மாவட்டசபைத் தேர்தல் கடமைக்கு வந்த 400 க்கு மேற்பட்ட சிங்கள நகர்காவல் படையினர் துரையப்பா விளையாட்டு அரங்கில் தங்கியிருந்தனர். இவர்கள் தான் மதிலால் ஏறிக்குதித்து நூலகத்திற்குத் தீமூட்டினர். இதில் மோசமான விடயம் என்னவென்றால் தீயணைக்க வந்தவர்களை நகர்காவலர்கள் (போலீஸ்) தடுத்தனர். குசுகுசுப் பேச்சு குடாநாடு முழுவதும் பரவப் பரவ மக்கள் பயம் அதிகரித்தது. மக்கள் வெளியேவர அஞ்சினர்.

நூல்கள், ஓலைச் சுவடிகளைச் சேகரிப்பதிலும் தனது ஆக்கங்களைப் பாதுகாப்பதிலும் ஈடுபட்டவர் பெருமைக்குரிய டேவிட் தாவீது அடிகளார் ஆவார். “நூலகம் எரிக்கப்பட்டது” என்பதைக் கேட்ட வுடன் மாரடைப்பினால் மரணமானார். தமிழ் உலகம் ஒரு பெரும்

கல்விமானை இழந்தது. எங்கும் ஒரே சோக மயம். கடமையின் பொருட்டு கண்டியில் இருந்த கஜனும் யாழ் சென்று நூலகத்தையும் ஈழநாடு அச்சகத்தையும் பார்த்தான். நூலகத்தின் கீழ்ப்பகுதியில் உள்ள இடதுபக்க மூலையில் இருந்த மூன்று பெரிய அலுமாரிகள் மட்டும் முற்றாக எரிக்கப்பட்டிருந்தன. ஏனைய பகுதிகள் அரைகுறையாகவும் அலங்கோலமாகவும் காணப்பட்டன. நூலகத்தின் பிரதான பகுதியின் இடது பக்கத்தில் தான் பெரும் அரசியல் பிரமுகர்களின் சுயவிபர ஆராய்ச்சிக் குறிப்புகள் காணப்பட்டன. கஜன் தனது பட்டப்படிப்புக் காலத்தின் ஞாபகங்களை ஒரு முறை மீட்டுக் கொண்டான். ஏன் இந்த அலுமாரி முற்றாக எரிக்கப்பட்டது? கஜன் ஒரு வாரத்திற்கு மேல் சரியாகச் சாப்பிடவில்லை.

1956 இல் இலங்கைப் பாராளுமன்றத்தில் தனிச்சிங்கள மொழிச் சட்டம் விவாதிக்கப்பட்டது. பிரபல சட்டத்தரணியும் இராணி அப்புக்காத்துமான திரு.ஜி.ஜி.பொன்னம்பலமும், சட்டத்தரணி திரு. ஜெ.ஆர்.ஜெயவர்த்தனாவும் விவாதத்தில் ஈடுபட்டனர். சூடான விவாதம் நடந்தது. ஜெ.ஆர்.ஜெயவர்தனா தான் ஒரு தூய பௌத்த சிங்களவன் என்றும், தனது நாட்டின் மொழி சிங்களம் மட்டுமாகவே இருத்தல் வேண்டும் என்றார். இதற்கு திரு.ஜி.ஜி.பொன்னம்பலம் தனது மறுப்பைத் தெரிவித்தார். தமிழுக்கு சமஅந்தஸ்து வேண்டும் என்றும் தமிழில் இருந்துதான் சிங்களம் தோன்றியது என்றார். அத்துடன் “நீ ஒரு தூய சிங்களவனல்ல. உனது முன்னோர்கள் இந்தியாவில் உள்ள மலபாரில் இருந்தே வந்தவர்கள். இங்கு இச்சபையில் பொய் பேசாதே.” என்றார் ஜி.ஜி. இதனைக் கேட்ட ஜே.ஆர். “உமது கூற்றை நிரூபிக்க முடியுமா” என்று கேட்டார்.

மிகவும் ஆவேசப்பட்ட ஜி.ஜி. “உம்மைப்போன்றவர்கள் பொய் யுரைப்பீர்கள் என்று தான் தாவீது அடிகள் போன்ற கல்விமான்கள் செய்த சுயவிபர ஆராய்ச்சிகள் யாவும் யாழ் நூலகத்தில் நன்கு பாதுகாக் கப்படுகின்றன” என்றார். பாராளுமன்றப் பதிவேட்டில் பதியப்பட்ட இச் சம்பவம் ஜே.ஆரை வாய் மூடச் செய்தது. ஆனால் அவரது அடிமனதில் குரோத எண்ணம் எரிந்து கொண்டே இருந்தது.

1981 மே மாதம் மாவட்டசபைத் தேர்தலுக்காக 400 விசேட நகர் காவலரும் மூன்று சிங்கள அமைச்சர்களும் யாழ்ப்பாணத்திற்கு அனுப் பப்பட்டனர். இவர்கள் ஜே ஆரின் எண்ணத்தை நன்கு திட்டமிட்டு நிறைவேற்றினர். அத்துடன் பல கடைகளையும் பத்திரிகைக் காரியால யத்தையும் எரித்து இன்புற்றனர். பாராளுமன்ற அங்கத்தவர் குரலோ மக்கள்



யாழ். பொது நூலகம்

மக்கள் விருப்பத்திற்கு மாறாக திருத்தப்படும் நிலையில்

குரலோ எடுபடவில்லை. தமிழ் விரோதப்போக்குத் தொடர்ந்து இடம் பெற்றது. சிங்களச் சமூகம் ஏன் இவ்வாறு தமிழ் விரோத நடவடிக்கையில் ஈடுபட்டது? இது நன்கு ஆராயப்பட வேண்டிய தொன்று.

சாத்வீகப் போராட்டம் ஆயுதப்போராட்டமாக மாறியது. தான் செய்த பிழையை பின்னர் வந்த அரசு மறைக்க விரும்பியது. யாழ் மக்களின் விருப்பத்திற்கு மாறாக நூலகம் புனரமைக்கப்பட்டது. எரிக்கப்பட்ட உண்மையை மறைக்க அவசர அவசரமாக நூலகத்தை அரசு திறந்தது. ஆய்வுகளுக்கு உபயோகப்படும் மிகப்பழைய நூல்கள் மீண்டும் பெறமுடியாதவை என நினைக்கும் போது இரத்தக் கண்ணீர் தான் கொட்டுகிறது. எரிக்கப்பட்டவை கொல்லப்பட்டவை எவையும் மக்கள் மனங்களில் இருந்து மறைக்கப்படமுடியாதவை. ஒவ்வொரு தமிழ் மாணவனின் உள்ளத்திலும் மிகவும் ஆழமாக இவைகள் பதிந் துள்ளன.

வரலாற்று உண்மைகள் திரிபுபடுத்தப்பட்டு, அடுத்த சந்ததிக்குக் கொண்டு செல்வதிலும் புதிய கபடமான முறைகள் மேற்கொள்ளப் படுகின்றன. எடுத்துக் காட்டாகப் பாளி மொழியில் எழுதப்பட்ட மகாவம்சத்தைக் கூறலாம். மகாவம்சத்தையே அடிப்படையாக வைத்து தமது விளக்கங்களைக் கூறுகின்றனர். இற்றைக்கு எண்ணாயிரம்

வருடங்களுக்கு முன்னர் இலங்கையும் இந்தியாவும் ஒரு நிலப்பரப்பாகவே காணப்பட்டது. இப்போ எமக்குக் கிடைக்கும் செய்கோள் படங்கள் இதனை வெளிப்படுத்துகின்றன.

எனவே உண்மைகள் யாவும் எரிக்கப்படமுடியாதவை. அவைகள் புதைந்து போய்க் கிடக்கின்றன. கஜனின் நினைவில் இருந்தவை ஒருசில உண்மைகளே. இது போல் மேலும் பல உண்மைகள் வெளிப்படாமல் புதையுண்டு போய் உள்ளன.

தமிழ் மாணவர்கள் ஒவ்வொருவரும் வரலாற்று உண்மைகளைத் தோண்டி எடுத்தல் வேண்டும். எமது வரலாறு பல்வேறு கோணங்களில் ஆராயப்பட வேண்டும். தற்காலத்தில் உள்ள நவீனத்துவமான விஞ்ஞான ஆராய்ச்சிமுறைகள் தமிழ் மாணவர்களுக்கு கைகொடுக்கும். தமிழ் மாணவரின் விடாமுயற்சி நிச்சயம் வெற்றி பெறும்.

முயற்சி திருவினையாகும்.

## 4

## ஈழத் தமிழரின் அடையாளங்கள் படிப் படியாக மறைகின்றன!

1961 ஆம் ஆண்டில் விவசாயப் பயிற்சிக்காகக் கண்டிக்குச் சென்றான் கஜன். ஒவ்வொரு வார இறுதியிலும் கண்டி மாநகரத்தைச் சுற்றிப் பார்ப்பான். அந்த வாரம் தனது நண்பனுடன் கண்டியில் உள்ள அரும் பொருட் காட்சிச் சாலைக்குச் சென்றான். கஜன் அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த பொருட்களைக் கவனமாகப் பார்த்தான்.

கண்டியைக் கடைசியாக ஆண்ட மன்னன் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனின் சிம்மாசனம், அவனது உடை, முடி எல்லாவற்றையும் பார்த்தான். இவற்றுக்கான விளக்கங்கள் ஆங்கிலம், தமிழ், சிங்களம், ஆகிய மும் மொழிகளிலும் குறிக்கப்பட்டிருந்தன. எல்லா விபரங்களையும் தனது நண்பனுக்குக் காட்டி மிகவும் ஆச்சரியப்பட்டான்.

நண்பகல் நேரம் தமது போசனத்தை முடித்துக் கொண்டு மீண்டும் காட்சிச் சாலைக்குச் சென்றனர். அங்கு வைக்கப்பட்டிருந்த பழைய ஏடுகள் செப்புக் காசுகள் போன்றவற்றையும் பார்த்தான். ஆங்கிலேயருக்கும் மன்னனுக்கும் இடையில் இடம்பெற்ற ஆட்சி சம்பந்தமான ஒப்பந்தப் பிரதிகள் கண்ணாடிப் பெட்டியுள் வைக்கப்பட்டிருந்தன. இதில் ஆங்கிலப்பிரதி, தமிழ்ப் பிரதி, சிங்களப்பிரதி ஆகியன காணப்பட்டன. பழையகால தமிழ் எழுத்துக்கள் யாவும் விசிறிகள் உள்ளனவாகவிருந்தன. கஜன் இவற்றைத் தனது நண்பனுக்குக் காட்டி, அவனை விரைவாக வாசிக்கும் படி கேட்டான். நண்பனும் வாசித்தான்.

மேலும் பல காட்சிப் பொருள்களைப் பார்த்தனர். கண்டி இராச தானிக்குரிய சிறப்பான முடி தூய்மையான தங்கத்தினால் செய்யப்பட்டது எனக்குறிக்கப்பட்டிருந்தது.

மந்திரிமாரின் கையெழுத்துகள் யாவும் தமிழில் காணப்பட்டன. சிங்கள இராச்சியத்தில் ஏன் இவ்வாறு தமிழில் யாவும் காணப்படுகின்றன?எனத்

தனது நண்பனிடம் கேட்டான். ஸ்ரீ விக்கிரம ராசசிங்கன் தமிழ் நாட்டு மன்னன். அவனது மொழியிலேயே நிர்வாகம் நடைபெற்றது என நண்பன் விளக்கம் கூறினான். ஏன் இப்போது அது தொடரவில்லை என்பது கஜனுக்குப் பெரும் புதிராகவே இருந்தது.

அடுத்தவாரம் நாம் இருவரும் கொழும்புக்குச் செல்வோம் என முடிவுசெய்தனர். வார இறுதியில் இருவரும் கொழும்புக்குச் சென்றனர். சனிக்கிழமை காலை கொழும்பு அரும் பொருட் காட்சிச்சாலைக்குச் சென்றனர். மிகப் புராதனமான கல் ஆயுதங்களில் இருந்து பழைய மன்னர் கால பொருட்கள் யாவும் காணப்பட்டன. எல்லாப் பொருட்களையும் பார்த்தனர். பொலன்னறுவைக் காலத்தில் இருந்ததாகக் கூறப்படும் சிவன் கோவில்கள் பற்றி இருவரும் அறிந்திருந்தனர். அச் சிவன் கோவிலில் இருந்த பெரியதொரு நடராசர் சிலையைக் கண்டு வியந்தனர். அப்படியான ஒரு சிலையை வேறு ஒரு இடத்திலும் பார்க்கவில்லை என்பதை இருவரும் அறிந்து கொண்டனர். ஆங்கிலேயர் காலத்தில் இச் சிலைகள் இந்த அரும் பொருட்காட்சியகத்திற்கு வந்திருக்க வேண்டும் என்ற முடிவிற்கு வந்தனர்.

சோழர் காலச் சிற்பவேலைக்குச் சான்றாக இச்சிலை அமைந்திருப்பதாக இருவரும் பேசிக்கொண்டனர். மேலும் புராதன மன்னர்கள் எவ்வளவு தூரம் தமிழர் கலாச்சாரங்களை போற்றிப் பாதுகாத்தனர் என்பதை அறிந்து பரவசப்பட்டனர். தற்போது நிலவும் தமிழ் விரோத ஒடுக்கு முறைகள், இத்தகைய கலாச்சாரச் சின்னங்களைப் பாதுகாக்குமா? எனக் கேள்வி எழுப்பினர். மேலும் பல புராதனச் சின்னங்களைப் பார்த்தபின்னர் தமது இருப்பிடத்திற்குத் திரும்பினர்.

அடுத்த நாள் மிருகக் காட்சிசாலையைப் பார்த்த பின்னர் கண்டிக்குத் திரும்பினர். பொலன்னறுவைக் காலச் சின்னங்கள் கஜனின் மனதில் ஆழமாகப் பதிந்து விட்டன.

*21 வருடங்களின் பின்னர்:* கஜன் தான் கற்பித்த பாடசாலை மாணவர்களை விக்ரோறியா அணைக்கட்டைப் பார்வையிடுவதற்காகக் கூட்டிச் சென்றான். அணைக்கட்டை பார்த்தபின் மதிய உணவிற்காக கண்டியைச் சென்றடைந்தனர். இந்த வேளையில், தான் முன்னர் பார்த்த அரும் பொருட் காட்சியகத்திற்கு கஜன் மீண்டும் சென்றான். அங்கு கஜன் கண்ட காட்சி பெரும் வியப்பைக் கொடுத்தது.பொருட்களின் ஒழுங்கு மாற்றப்பட்டது மட்டுமல்ல, பலவற்றைக் காணவில்லை. தமிழில் காணப்பட்ட விபரங்கள் அங்கு இருக்கவில்லை. அவைகள் வேண்டுமென்றே அகற்றப்பட்டிருந்தன. ஸ்ரீவிக்கிரமராஜசிங்கனின்



நடராஜர் சிலை

உடை, வாள், முடி யாவும் மாறியிருந்தன. தங்க முடிக்குப் பதிலாக அதன் தோற்றமுடைய வேறு முடி காணப்பட்டது.

கண்டி ஒப்பந்தத்தின் தமிழ்ப் பிரதி காணப்படவில்லை. கஜனுக்குப் பெரும் ஏமாற்றமாகவே இருந்தது. சக ஆசிரியர்களுடன் கலந்து பேசியபோது இம் மாற்றங்கள் திட்டமிட்டே செய்யப்படுகின்றன என்பது புரிந்தது.

அதுமட்டுமல்ல, கொழும்பு அரும் பொருட்காட்சியகத்தில் இருந்த நடராசர் சிலையும் மாயமாக மறைந்த செய்தி வெளிப்பட்டது. தமிழரின்

வரலாற்று ஆதாரங்களும் அடையாளங்களும் மிகப் பழைய காலம் முதல் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றன அல்லது அகற்றப்படுகின்றன.

தமிழர் தாமாக உணர்ந்து இதற்கான முயற்சியை மேற்கொள்ளாவிடில், இருப்பதும் நாளடைவில் இல்லாது போய்விடும். எனவே ஈழத் தமிழர் ஒவ்வொருவரும் வரலாற்று ஆய்வாளராக மாறவேண்டும்.

# 5

# கல்வி நிறுவனம் ஒன்றின் திட்டமிட்ட இராணுவ ஆக்கிரமிப்பு

ஏறக்குறைய இருபத்தைந்து வருடங்களாக வடபகுதியில் உள்ள உயர் கல்லூரிகள் இராணுவத்தால் நன்கு திட்டமிடப்பட்டு ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன. சில கல்லூரிகள் முற்றாகவும் சில பகுதியாகவும் இராணுவத்தால் தொடர்ந்து அவர்கள் இருப்பிடமாக்கப்பட்டு வருகின்றன. இதன் பிரதான நோக்கம் யாதெனில் தமிழ்ச்சமூகம் கல்வியில் முன்னேற்றமடையக் கூடாதென்பதேயாகும்.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில், அவற்றைப்பெறும் பொருட்டுப் போராட முற்பட்ட மாணவர்களை வேரோடு சாய்க்கவெனத் திட்டமிட்ட செயற்பாடுதான் பாடசாலைகளின் இராணுவ ஆக்கிரமிப்பு. மிகவும் பரபரப்பான சூழலில் பாதிக்கப்பட்ட ஒரு அரச கல்வி நிறுவனமாக வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தை நோக்கலாம்.

1985 இல் இது ஒரு அரசாங்க முன்னணி மத்திய மகா வித்தியாலயமாகத் திகழ்ந்தது. ஏனெனில் சிறந்த வசதிகளுடன் கூடிய விவசாய விஞ்ஞானப் பிரிவு, நவீன விஞ்ஞான ஆய்வுகூடம், உலோக வேலைக்கூடம், மரவேலைக்கூடம், நூலகம், கைத்தறிகள் போன்ற சகல துறைகளையும் உள்ளடக்கி மாணவர்களுக்கான வதிவிட வசதிகளையும் தன்னகத்தே கொண்டு விளங்கியது. இவ்வசதிகளுக்கு ஏற்றாற்போன்று மிகச்சிறந்த ஆசிரியர்களும் அங்கு கடமைபுரிந்தனர். எனது விதிவசமோ காலத்தின் கோலமோ நானும் அங்கு அதிபராகக் கடமையாற்றினேன்.

1986 மே மாதத்தில் ஓர் இரவு ஏற்பட்ட பலத்த வெடியோசை வயாவிளான் பக்கத்தில் பல வதந்திகளை ஏற்படுத்தியிருந்தன. வயாவிளான் பள்ளிக்கூடத்தை ஆமி பிடிச்சுப் போட்டாங்களாம், "பிள்ளைகள் காவற்காரர் எல்லோரும் கொலை செய்யப்பட்டுவிட்டார்களாம்,"

தெற்குப் புன்னாலைக்கட்டுவன் பகுதியில் இருந்து மக்கள் இடம் பெயர்ந்து செல்கிறார்களாம், "தட்டிவான் கூட அந்தப்பகுதியால் ஓடவில்லையாம்" இத்தகைய வதந்திகளால் அச்சுவேலி பேரூர்ந்து நிலையத்திலும் ஏனைய இடங்களிலும் மக்கள் கூடி நின்று கதைத்துக் கொண்டிருந்தார்கள். நானும் எனது துவிச்சக்கர வண்டியை ஒரு வீட்டில் வைத்துவிட்டு பேருந்து நிலையத்தை நோக்கி நடந்தேன்.

விடுதியில் அகப்பட்ட ஒரு மாணவனின் தந்தை என்னைக் கண்ட வுடன் மைந்தன் இறந்துவிட்டான் என்ற வதந்தியினால் கலவரமடைந்து, என்னை வாய்க்கு வந்தபடி வன்சொற்களால் திட்டித்தீர்த்தார். நான் "பிள்ளைகள் அகப்பட்டிருக்கலாம் ஆனால் இறந்துவிட்டார்கள் என்ற செய்தி ஒன்றும் கிடைக்கவில்லை" என்று மாத்திரம் கூறினேன். அவர் எதனையும் பொருட்படுத்தாமல் மீண்டும் நிலத்தில் விழுந்து மண்ணை வாரித் திட்டித்தீர்த்தார். இவற்றை எல்லாம் உள்வாங்கிக் கொண்டு புன்னாலைக்கட்டுவனுக்குச் சென்றேன். அங்கு மிகவும் பதட்டமான சூழ்நிலை நிலவியது. மக்கள் அங்கு நிற்க அஞ்சினார்கள். உடன் உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலயத்திற்குச் சென்றேன். ஆசிரியர்களுடன் கலந்தாலோசனை செய்தபின்பு கல்வித் திணைக்களத்துக் குச் சென்றேன்.

கல்வி அதிபதியுடன் கலந்துரையாடினேன். பிரதம கல்வி அதிகாரியும் உடன் இருந்தார். கல்வி அதிபர் அரச அதிபருடன் தொலைபேசியில் கதைத்தார். மாவட்ட நிலைமைபற்றி இராணுவ அதிகாரியுடன் கலந்துரையாடப் போவதாக அரசஅதிபர் கூறினார். எனவே பாடசாலை அதிபருடன் கச்சேரிக்கு வரும்படி கல்வி அதிபரை அழைத்தார். கல்வி அதிபதியும் நானும் கச்சேரிக்குப் புறப்பட்டோம். அச்சமயம் யாழ் கோட்டை இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு இருந்தது. அங்கு தான் இராணுவ அதிகாரியின் சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. எனவே கச்சேரியில் இருந்து அரச அதிபரும், ஏனைய திணைக்கள அதிகாரிகளும், நாமும் பேருந்து மூலம் கோட்டைக்குப் புறப்பட்டோம். சுப்பிரமணியம் பூங்காவில் நாம் வண்டியை விட்டு இறங்கிக் கால்நடையாகக் கோட்டைக்குச் சென்றோம். கோட்டைக்குள் இராணுவத்தினர் எங்கள் எல்லோரையும் வரவேற்று அமரச்செய்தனர். தேநீர் தந்து உபசரித்தனர். ஒரு மணி நேரம் வரை காத்திருந்தோம். உலங்கு வானூர்தி ஒன்று வரும் சத்தம் கேட்டது. அதேசமயம் ஒரு வெடிச் சத்தமும் கேட்டது. மேலும் அரை மணி நேரம் காத்திருந்தோம். கோட்டை இராணுவ அதிகாரி தொடர்பு கொண்டு கதைத்த பின்னர் எங்களிடம் வந்து, இராணுவ

அதிகாரி நாவற்குழி இராணுவ முகாமில் இருக்கிறார் நீங்கள் சிரமத்தைப் பொருட்படுத்தாது அங்கு செல்லுங்கள் என்றார்.

மீண்டும் எல்லோரும் கச்சேரிக்கு வந்து, மதிய போசனத்தை முடித்துக் கொண்டு நாவற்குழி நோக்கிப் புறப்பட்டோம். செம்மணி மயானத்திற்கு அண்மையில் எமது வாகனம் நிறுத்தப்பட்டது. தொடர்ந்து பயணம் செய்யமுடியாது என்ற நிலை ஏற்பட்டதால். மீண்டும் எல்லோரும் கச்சேரிக்கு வந்தோம். நாம் கல்வித் திணைக்களத்திற்குத் திரும்பவிருந்த சமயம் அரசஅதிபர் அவசரமாக எம்மை அழைத்தார். அவரது அறைக்குள் சென்ற போது அவர் ஒரு நல்ல செய்தியை எமக்குக் கூறினார். "விடுதி மாணவர்களும் மற்றும் ஊழியரும் பாதுகாப்பாக உள்ளனர் எனத் தகவல் கிடைத்துள்ளது" என்று கூறினார். பெரும் நிம்மதிப் பெருமூச்சோடு வீடு திரும்பினோம். மாணவர்களும் ஊழியரும் பாதுகாப்பாக உள்ளனர் என்பதை பத்திரிகைக்கும் சம்பந்தப்பட்டோருக்கும் அறிவித்தோம்.

மறுநாள் காலை உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் வயாவிளான் மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் கூட்டம் நடைபெற்றது. கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அரச அதிபரிடமிருந்து ஓர் அவசர அறிவித்தல் வந்தது. மாணவர்களையும் ஊழியரையும் மீட்பதற்காக உடன் அங்கு வரும்படி அரச அதிபர் தகவல் அனுப்பி யிருந்தார். உடன் நானும் உடற்கல்வி ஆசிரியரும் கச்சேரிக்குச் சென்றோம். கல்வித் திணைக்களத்தில் இருந்து ஒருவரும் வரவில்லையா? என்று கேட்டார். ஒருவரும் வரவில்லை என்று கூறினேன். உடன் கல்வித் திணைக்களத்துடன் அரச அதிபர் தொடர்பு கொண்டு விசாரித்தார். வருவதற்கு வாகனம் வேண்டும் என்று கேட்டனர். அதற்கு அரச அதிபர் "நானே கச்சேரிக்கு துவிச்சக்கரவண்டியில் தான் வருகிறேன் உங்களுக்கு வாகனம் தேவையா?" என்று கிண்டலாகப் பேசினார். கால் மணி நேரத்தில் போவதற்கு ஆயத்தமாகவிருக்கும் நபர்களின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், விலாசம் போன்ற விபரங்களைத் தயாரிக்கும் படி பணித்தார் அரசஅதிபர்.

பட்டியல் தயாரானது, அப்போதும் கல்வித் திணைக்களத்தில் இருந்து ஒருவரும் வரவில்லை. அப்போது எனது மனதில் ஏற்பட்ட கவலையை விபரிக்கமுடியவில்லை. நானும் உடற் கல்வி ஆசிரியரும், மாணவர்கள் சார்பாக கிளிநொச்சியைச் சேர்ந்த ஆசிரியை ஒருவரும், சிற்றூழியர் சார்பாக கச்சேரியில் கடமைபுரியும் சிற்றூழியர் சங்கத் தலைவரும் பட்டியலில் இடம்பெற்றோம். அரச அதிபரின் அறிவுறுத்தலின் பிரகாரம்

நாம் வடக்குப்புன்னாலைக் கட்டுவன் சந்தியில் இருந்து நடந்தேசெல்ல வேண்டும்.

கச்சேரியில் இருந்து புறப்பட்டுப் பின் ஆசிரியர் குழுவிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு, வடக்குப்புன்னாலைக் கட்டுவனை அடைந்தோம். அரசஅதிபர் நாம் திரும்பும் வரை இராணுவத் தளபதியுடன் தொடர்புகொண்ட வண்ணம் இருப்பேன் என எமக்கு உறுதி கூறியிருந்தார். வடக்குப்புன்னாலைக் கட்டுவனில் அகப்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள் கூடியிருந்தனர். எல்லோரின் முகமும் மிக வாட்டமுற்றுக் காணப்பட்டது. பிற்பகல் இரண்டு மணியளவில் நாம் அங்கு வருவதாகத் தகவல் கொடுக்கப்பட்டது. எல்லோருக்கும் உள் மனத்தில் பயம் இருந்தபோதும் அதனை வெளிக்காட்டிக் கொள்ள முடியவில்லை. சந்தியில் இருந்து அரைமைல் தூரம் நடந்திருப்போம். பயங்கரமான அமைதி, வீடுகள் யாவும் வெறிச்சோடிக் காணப்பட்டன. எவரையும் காணவில்லை. மக்கள் இடம்பெயர்ந்த பின் தனித்து விடப்பட்ட நாய்கள் காணப்பட்டன. குரும்பசிட்டிக்குச் செல்லும் வீதியை அண்மித்த போது வயாவிளான் மத்திய மகாவித்தியாலய மதிலுடன் அமைந்திருந்த காவல் அரன் தென்பட்டது. எனவே கைகள் இரண்டையும் உயர்த்திய வண்ணம் நடந்தோம். காவலில் இருந்தவர்கள் இருவர் வெளியே துப்பாக்கிகளுடன் வந்தனர். ஒரு கணம் நாம் நடப்பதை நிறுத்தினோம். ஒருவரும் வாய் திறக்கவில்லை.

உள்ளே வரும்படி சைகை காட்டினர். வித்தியாலய வாசலில் எங்கள் அடையாள அட்டைகளைப் பார்வையிட்டனர். பின்னர் முன்னும் பின்னும் இராணுவ வீரர்கள் வர, விடுதிக்குச் சென்றோம். விடுதிக்காப்பாளர் மாணவர்களை அழைத்தார். எங்களைக் கண்ட மகிழ்ச்சியில் எல்லோரும் வந்து எம்மைச் சூழ்ந்து கொண்டனர்.

எல்லா மாணவர்களும் ஊழியர்களும் இருக்கின்றனரா எனச் சரிபார்த்தோம். மாணவர்கள் எங்களுக்கும் தேநீர் தந்து உபசரித்தனர். ஒரு இராணுவ அதிகாரி எங்களிடம் வந்து கட்டளைத் தளபதி வருகிறார் என்றும், அவரை எல்லோரும் சந்திக்கலாம் என்றும் கூறினார். சிறிது நேரத்தில் எல்லோரும் உணவு உட்கொள்ளும் மண்டபத்தில் கூடினோம். கட்டளைத் தளபதி வந்ததும் எல்லோருக்கும் கைகொடுத்து வரவேற்றார். பின்னர் அவர் "எல்லோரும் சிறிது சங்கடப்பட்டாலும் கடந்த மூன்று நாட்களும் அவர்கள் எந்தவித குறையுமில்லாமல் பாதுகாப்பாக இருந்தார்கள்" என்று சிங்களத்தில் கூறினார். அவர் கூறியது அங்கிருந்த இராணுவத்தினருக்கு விளங்கியிருக்கும், ஆனால் மற்றவர் எவருக்கும்


விளங்கியிருக்காது. வேறு ஏதாயினும் கேட்க விரும்பினால் கேட்கலாம் என்றார். ஒருவரும் வாய்திறக்கவில்லை. எல்லோரும் எப்போ திரும்பு வோம் என்ற ஏக்கத்துடன் இருந்தனர்.

கட்டளைத்தளபதி விடைபெற்றுச் செல்ல, வீடியோ படப் பிடிப்பாளரும் அவருடன் சென்றுவிட்டனர். எனது நண்பரான உடற்கல்வி ஆசிரியர், ஊடகங்களுக்கான நாடகம் முடிந்துவிட்டது என்று எனது காதுக்குள் சொன்னார். நானும் அதனை ஏற்றுக் கொண்டேன். விடுதிக் காப்பாளர் மாணவர்களைக் கூட்டிச்செல்வதற்குத் தயார்படுத்த வேண்டும் என்றார். அவருக்கு அரைமணி நேரத்தை ஒதுக்கினோம். இவ்வேளையில் காரியாலயம் எப்படி இருக்கிறது என்பதைப் பார்க்கச் சென்றோம். இராணுவத்தினர் இருவர் எங்களை அங்கு கூட்டிச்சென்றனர். யன்னலின் ஊடாக எட்டிப்பார்க்கவே முடிந்தது. அறைத்திறப்பு இல்லை என்றும் வேறு பூட்டுப் போடப்பட்டுள்ளதையும் அறிந்து கொண்டோம். முக்கியமான பத்திரங்கள் யாவும் மறைக்கப்பட்டிருக்கலாம் என்ற நினைவுடன் விடுதிக்குத் திரும்பினோம்.

மாணவர்களும் ஊழியர்களும் வரிசையாகத் தத்தமது பொதிகளுடன் காத்திருந்தனர். அந்த நேரத்தில் வேறு எதனையும் யோசிக்க முடிய வில்லை. மாணவர்களின் பாதுகாப்பே முக்கியமானதாகப்பட்டது. ஒருவருடைய முகத்திலாவது சிரிப்பு இல்லை. ஏதோ மரணவீட்டிற்குப் போய் வந்தமாதிரியான உணர்வே காணப்பட்டது. எல்லோரும் இரண்டு வரிசையாக பிரதான வீதிக்கு வந்தோம். திரும்பவும் ஒரு முறை எமது வித்தியாலத்தைப் பார்த்தேன்.

அதுவரை அடக்கிவைத்திருந்த எனது கவலை கண்களில் இருந்து கண்ணீராக வெளிவந்தது. ஒருவாறு சமாளித்துக் கொண்டு மாணவர்களுக்குப் பின்னால் நடந்தேன்.

வடக்குப்புன்னாலைக் கட்டுவன் சந்தியை அடைந்தது தான் தாமதம், மாணவர்களின் பெற்றோரும் உறவினர்களும் போராளிகளும் வந்து சூழ்ந்து கொண்டனர். கட்டியணைத்து முத்தம் இட்டவர்களும், துருவித் துருவிக் கேள்வி மேல் கேள்வி கேட்டு எல்லோரையும் திக்குமுக்காடச் செய்துவிட்டனர். இதில் என்ன விசேடம் என்றால், எந்த நபர் என்னை வாய்க்கு வந்தபடி திட்டித் தீர்த்தாரோ அவரே நேரில் வந்து, எனது கன்னங்களைத் தடவி மன்னிப்புக் கேட்டார். அது மட்டுமல்ல உடன் அருகில் இருந்த கடைக்குச் சென்று குளிர்பானம் வாங்கிவந்தார். அவரது மகனுக்கே அதனைக் கொடுத்தேன். எல்லோரையும் பொறுப் பானவர்களிடம் ஒப்படைத்து விட்டுக் கல்வியதிபதியின் வீட்டிற்குச்





உரும்பிராயில் இயங்கும் எமது பாடசாலையின் தற்போதய தோற்றம்

சென்று நடந்தவற்றைக் கூறினேன். பத்திரிகைக்காரருக்கும் தெரிவித்து யாவருக்கும் நன்றி கூறிவிட்டு வீடு திரும்பினேன்.

வீடு திரும்பியபோது தான் நான்செய்த பெருந்தவறு எனக்குப் புரிந்தது. திடீரென எடுக்கப்பட்ட முடிவின் காரணமாக இராணுவ முகாமுக்குப் போகும் விடயத்தை வீட்டிற்குத் தெரிவிக்க வில்லை. உறவினர்கள் பலர் வீட்டில் இருந்ததால் ஒருவாறு தப்பித்துக் கொண்டேன். எங்களுக்குத் தெரியாமல் இனிமேல் இராணுவ முகாமுக்குச் செல்லக்கூடாது என்ற அன்புக் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. எங்கள் வீட்டில் தொலைக்காட்சிப் பெட்டி இருக்கவில்லை. ஆனால் தொலைக்காட்சிப் பெட்டியைப் பார்த்தவர்கள் மறு நாள் எனக்குப் பலசெய்திகளைத் தெரிவித்தனர். சிலர், "நீ எப்போது கல்வி அதிபதியானாய் ?" என்று கேட்டனர். காரணம், தொலைக்காட்சிச் செய்தியில் என்னைக் கல்வி அதிபதியாகவும், உடற்பயிற்சி ஆசிரியரை அதிபராகவும் சித்தரித்திருந்தனர்.

வடபகுதியில் மேலும் பல பாடசாலைகள் இராணுவத்தால் ஆக்கிர மிக்கப்படுவதும், பின்னர் விடுவிக்கப்படுவதும் நாளாந்தம் செய்தியாக வெளிவந்து கொண்டிருந்தன. வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தை எங்கு ஆரம்பிப்பது என்று ஏங்கிக் கொண்டிருந்த வேளையில், புன்னாலைக்கட்டுவன் அரசாங்க தமிழ் கலவன் பாடசாலை அதிபர் எமக்குக் கைகொடுத்து உதவினார். ஆயர்கடவை பிள்ளையார் கோவில் அன்னதான மண்டபம் எமக்கு உதவியது. இதற்கிடையில் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் இருந்து இராணுவம் வெளியேறிவிட்டது என்ற செய்தி ஆறுதலைத் தந்தாலும், மீண்டும் அவர்கள் வந்துவிடுவார்கள் என்ற எண்ணமே தலைதூக்கியிருந்தது. இதனால் வித்தியாலயத்தின் சொத்துக்கள் அனைத்தும் மக்கள் மயமானது. விவசாயப் பண்ணையில் இருந்த கோழிகள், கறவைமாடுகள் உபகரணங்கள் முதல் யாவும் மாயமாய் மறைந்துவிட்டன. ஒரு வார இறுதியில் இது நடைபெற்றதால் இதனைக் கேள்வியுற்று மனம் பொறுக்கமுடியாது அங்கு சென்றேன். போகும் போது கூரை ஓடுகள், மரங்கள் கையில் பட்டவை யாவும் எடுத்துச் செல்லப்பட்டன. பார்க்கப் பார்க்க வயிறு பற்றிஎரிவது போல் இருந்தது. வாயிலைக் கடந்து உள்ளே சென்ற போது போராளிகள் பெரும் ஆயுதங்களுடன் நிற்பதைக் கண்டேன். அவர்களிடம் மன்றாட்டமாகக் கெஞ்சினேன். "மக்கள் சொத்து மகேசன் சொத்து, உம்மால் முடிந்ததை நீர் செய்யும்" என்று என்னை வெளியே அனுப்பி விட்டார்கள். வாழ் நாளில் நான் அடையாத துன்பத்தை அன்று அனுபவித்தேன். கல்வி அதிபதியைத் தேடிச்சென்றேன். அவரைச் சந்திக்க முடியவில்லை. பிரதம

கல்வி அதிகாரியின் வீட்டிற்குச் சென்றேன். அவரிடம் நடந்தவற்றை நடப்பவற்றை எடுத்துரைத்தேன்.

ஆயர்கடவை பிள்ளையார் கோவில் முன்றலில் அமைந்திருக்கும் புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் தனது பணிகளை 1986 யூன் 4ஆம் திகதி ஆரம்பித்தது. மாணவர்களையும் ஆசிரியர்களையும் ஒருங்கிணைப்பதில் பாரிய நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. இராணுவ ஆக்கிரமிப்பின் காரணமாகச் சிதறியோடிய மாணவர்கள் படிப்படியாக வந்து சேர்ந்தனர். இரு பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் பல இன்னல்களைச் சந்தித்தனர். ஒரு சில புத்தகங்களும் உபகரணங்களும் மீண்டும் வந்து சேர்ந்தன. முழு வீச்சில் இல்லாவிட்டாலும் ஓரளவுக் காயினும் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் தனது பணியினைச் செய்துவந்தது.

வலி வடக்குப்பகுதியில் மட்டுமல்லாது வடமாகாணத்தின் ஏனைய பகுதிகளிலும் பாடசாலைகளின் ஆக்கரமிப்பு இடம்பெற்று வருவது ஒரு நீண்டகால அடிப்படைத் திட்டமாகும். இது ஒரு பாரதூரமான மனிதஉரிமை மீறலாகும். பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்வது அவசியம் எனக் கருதுகிறேன்:

1. ஆக்கிரமிக்கப்பட்ட அனைத்துப் பாடசாலைகளும் நடைபெற்ற அனர்த்தங்களை சட்ட ஆலோசனையுடன் முறைப்படி ஆவணப் படுத்துதல் வேண்டும்.
2. ஏற்பட்ட ஆளணி இழப்புக்கள் சொத்தழிவுகள் யாவும் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.
3. பாதிக்கப்பட்ட ஒவ்வொரு மாணவனும் தமது பாதிப்புகளை சம்பந்தப்பட்ட பாடசாலை மூலமாகப் பதிவுசெய்தல் வேண்டும். பழைய மாணவர் சங்கங்கள் இதனை ஊக்கப்படுத்தலாம்.
4. பாதிக்கப்பட்ட பாடசாலைகளின் பழையமாணவர் சங்கங்கள் முறைப்படி தயாரித்த ஆவணப் பதிவுகளை சட்ட ஆலோசனையுடன் மனித உரிமைக்கழகத்திற்கும், ஐ.நா சபை போன்றவற்றுக்கும் அனுப்பலாம்.
5. பாடசாலையை மீளப் பெறுவதற்கும் நிவாரணம் பெறுவதற்கும் ஏற்ற சட்ட நடவடிக்கையினை மேற்கொள்வதற்கும் சர்வதேச மட்டத்தில் ஓர் குழுவை அமைத்து நடவடிக்கை எடுப்பது பழைய மாணவர் சங்கங்களின் பணியாகும்.

பகுதி II

# தெய்வப்பிறவி

## 6

# தெய்வப்பிறவி

எங்களுடன் இருபத்தாறு வருடங்கள் வாழ்ந்து திடீரென ஒரு நாள் அவள் இவ்வுலகை விட்டு மறைந்தால், அவளது நினைவலைகள் அவளது வாழ்வின் மகத்துவத்தை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கும். அந்தத் தெய்வாம்சமான நினைவுகளை மீண்டும் நினைத்துக் கொள்வதில் ஒருவித சுகம் உண்டு.

**ஆரம்ப காலம்**

1981 செப் 14 ஆம் நாள் எமது செல்வப்புதல்வி ஜெயபாரதி அவதரித்த திருநாள். சுற்றத்தாரின் வாழ்த்துக்களோடும் இரு சகோதரிகளின் அரவணைப்போடும் வளர்ந்தாள் ஜெயபாரதி. குடும்பத்தில் பல நற்காரியங்கள் நடந்தன. அம்மாவின் அரவணைப்பிற்கு மேலால் அம்மம்மாவின் அரவணைப்பு மிக அதிகமாகவே இருந்தது. எல்லோருக்கும் ஜெயா செல்லப்பிள்ளையானாள். “செல்லக்குட்டி” என்றே அழைத்தோம்.

**பள்ளிப் பருவம்**

பாடசாலையில் சேர்வதற்கு முன்னரே அச்சுவேலி புனித திரேசா கல்லூரியில் இயங்கிய பாலர் வகுப்பில் ஆரம்பக் கல்வியைப் பெற்றுக் கொண்டாள். சின்னஞ் சிறிய சிட்டுக்களின் விளையாட்டு விழாவை வெகுவிமரிசையாக இக் கல்லூரி கொண்டாடுவது வழக்கம். ஜெயா தனது திறமையைக் காட்டத் தவறியதில்லை. அருட் சகோதரிகள் முதல் அத்தனை ஆசிரியருக்கும் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டாள்.

ஜெயபாரதி கல்வியில் காட்டிய ஊக்கம் எம்மையெல்லாம் மகிழ்வுறச் செய்தது. கல்விநிர்வாகச் சேவையில் தேர்ச்சி பெற்றதினால் சிலவருடங்கள் பிரிந்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போதும் கூட ஜெயாவின் கல்வி முயற்சி மேலோங்கியது. தரம் 5 புலமைப்பரீட்சை யில் சித்தியடைந்து வேம்படி மகளிர் கல்லூரியில் தனது உயர் கல்வியைத் தொடர்ந்தாள்.

## இடப் பெயர்வு

நாட்டின் அரசியல் நிலையும் அரசினால் மேற்கொள்ளப்பட்ட பல பாரபட்சமான நடவடிக்கைகளும் என்னைக் கனடா நாட்டிற்கு இடம் பெயரவைத்தது. நாளாந்தம் பல இராணுவ இன்னல்களை அனுபவித்த போதும் அம்மம்மாவின் அரவணைப்பில் ஓரளவுக்காயினும் ஆறுதலைப் பெற்றுக் கல்வியைத் தொடர்ந்தாள். கனடா செல்லும் முயற்சியில் 10 மாதங்கள் வரை கொழும்பில் எதுவிதமான கல்வியையும் பெறாது தங்கி இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

1994இல் கனடா வந்தபோது அங்குள்ள கல்வி நடைமுறை ஜெயாவிற்குப் புதிதாகவிருந்தது. கனடா கல்வித்திட்டத்துடன் ஒன்றிணைவதற்குப் பெரிதும் சிரமப்பட்டாள். வெறுப்பு மேலீட்டால் தன்னை உடனடி யாக அடுத்த விமானத்தில் அம்மம்மாவிடம் சேர்ப்பிக்குமாறு வற்புறுத்தினாள்.

## இடைநிலைக் கல்வி

ஜெயாவின் கல்வி முன்னேற்றத்தில் ஏற்பட்ட இந்த தர்மசங்கடமான நிலையை மாற்றவேண்டி, அவளது பாடசாலை அதிபரையும் ஆங்கில ஆசிரியரையும் சந்தித்துக் கலந்துரையாடினேன். ஜெயா அனுபவித்த இடர்ப்பாடுகளை விரிவாக எடுத்துக் கூறினேன். ஆசிரியர்களும் அதிபரும் நாம் எதிர்பார்த்ததைவிட நல்ல ஒத்துழைப்பை நல்கினர். ஜெயா பாட சாலைக்குச் செல்லும் போதும், வகுப்பில் இருக்கும் போதும் ஆங்கிலம் தெரிந்த வேற்று இனமாணவியை இணைந்து இயங்குமாறு செய்தனர். இருவரும் ஆரம்பத்தில் சங்கடப்பட்டாலும் சில மாதங்களில் நல்ல நண்பர்களாயினர். ஜெயா வாசிப்பதில் அதிக அக்கறை செலுத்தியதால் ஓரிரு ஆண்டுகளில் ஆங்கிலத்தில் பிரமிக்கத்தக்க முன்னேற்றம் கண்டாள். முயற்சி வீண்போகவில்லை.

**பக்தியுடன் கூடிய கலை ஆர்வம்**

ஓய்வு நேரத்தில் ஓவியம் வரைவது ஜெயாவின் பொழுது போக்கு. பெரும்பாலும் தெய்வங்களின் படங்களை வரைந்து மகிழ்வாள். ஜெயாவின் பக்தி வெள்ளத்தில் நாமும் மூழ்கி மகிழ்ந்தோம். ஒரு முறை வீட்டில் உள்ள சுவாமி அறையில் உள்ள படங்களுக்கு மேலாக ஒரு கோபுரம் போன்ற அமைப்பைச் செய்யவேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. அதற்கான புறவடிவத்தைத் தடித்த மட்டையில் வரைந்து முடித்தாள். கோபுரத்தைச் செங்குத்தாக நிறுத்துவதற்கு மரத்தாலான ஒரு சட்டத்தை நான் அமைத்துக் கொடுத்தேன். கோபுரத்தின் படிகள் தூண்கள் சிலைகள் யாவும் வரையப்பட்டன. தான் கற்றுக் கொண்ட ஓவியக் கலையின் நுட்பங்களைப் பயன்படுத்தி பிரகாசிக்கும் வண்ணங்கள் தீட்டப்பட்டன. இந்தப் பக்தி ஜெயாவிடம் எப்படிப் புகுந்து கொண்டது என்று மனம் மகிழ்ந்தோம்.

மாதத்திற்கு இரு தடவையாவது ஊரில் உள்ள தனது அம்மம்மாவிற்குக் கடிதம் எழுதி மகிழ்வாள். குடும்பத்தில் உள்ள சகல புதினமும் அம்மம் மாவிற்குத் தெரியக்கூடியதாக எழுதிமகிழ்வாள்.

**உயர்கல்லூரியில் சாதனை**

கனிஷ்ட பாடசாலையைச் செவ்வனே நிறைவு செய்து உயர்தர பாடசாலைக்குச் சென்றாள். ஒவ்வொரு தவணை முடிவிலும் தாய் தந்தை என்ற வகையில் ஆசிரியர்களைச் சந்தித்தோம். ஜெயா பெற்ற விருதுகளைக் கூறி கல்லூரி பெருமைப்படுவதாகக் கூறினார்கள்.

மகாஜனக் கல்லூரி பழையமாணவர் சங்கப் போட்டிகள் புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தா கல்லூரிப் போட்டிகளிலும் விருதுகள் பெற்று மகிழ்ந்தாள். தான் பெற்ற புள்ளிகளின் அடிப்படையிலும் மேற் கொண்ட தொண்டர்பணியிலும் சுலபமாகவே றொறன்ரோ பல்கலைக்கழகத்தினுள் புகுந்து கொண்டாள்.

றொறன்ரோ நகர வளாகத்திற்கும், ஸ்காபுரோ வளாகத்திற்கும் மத்தியில் நாம் குடியிருந்ததால் இருவளாகங்களிலும் மாறி மாறித் தனது விரிவுரைகளுக்குச் சமூகங் கொடுக்கக் கூடியதாகவிருந்தது. உயிரியல் விஞ்ஞானத்தைச் சிறப்புப் பாடமாகத் தெரிவுசெய்து தனது மேற்படிப்பைத் தொடர்ந்தாள். இக் காலத்தில் அம்மம்மாவின் மறைவு ஜெயாவைப் பாதித்தது. ஒவ்வொரு செவ்வாய் வெள்ளி மாலையிலும்

பஜன் பாடத்தவறுவதில்லை. பஜன் பாடல்களை அம்மம்மாவின் நினைவாகப் பிரசுரம் செய்து அதனைப்பாடி மகிழ்ந்தோம்.

**விசேடபட்டம்**

றொறன்ரோ பல்கலைக் கழகத்தில் உயிரியல் இரசாயனப் பாடத்தில் அதிவிசேட பட்டத்தை ஜெயா பெற்றபோது நாம் எல்லோரும் பெரு மகிழ்வடைந்தோம். பட்டமளிப்பு விழாவிற்குச் சென்று கலந்து மகிழ்ந்தோம். ஜெயாவின் வாழ்க்கையில் இது ஒரு மைல் கல்லாகும். தொடர்ந்து சிறுவர் வைத்தியசாலையிலும் மகளிர் வைத்தியசாலை வளாகத்திலும் தொண்டர் சேவையை ஜெயா மேற்கொண்டபோது, தான் தனது மேற்படிப்பை தொடரவேண்டும் என பல பல்கலைக் கழகங்களுக்கும் மனுச்செய்தாள்.

குவெல்ப் பல்கலைக்கழகம் ஜெயாவின் சாதனைகளை ஆராய்ந்ததன் பின், அங்கு உயிரியல் இரசாயனத்தில் விசேடபட்டம் பெறுவதற்கு ஓர் புலமைப் பரிசிலை வழங்கியது. ஜெயா மிகவும் மகிழ்ச்சியடைந்தாள். பல்கலைக்கழக மாணவிகள் விடுதியிலேயே தங்கிப் படிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டன. வாரஇறுதியில் எம்முடன் வந்து தங்கிவிட்டுச் செல்வாள். விடைபெறு முன்னர் இருவரையும் வணங்கி விட்டுச் செல்வாள்.

**வீணைப் பயிற்சி**

பல்கலைக்கழகத்தில் படிக்கும் போதே வீணை பழக வேண்டும் என்ற ஆர்வம் மேலிட்டது. நாம் வசித்த வீதியில் வசித்த வீணை ஆசிரியையைத் தானாகவே சென்று கண்டு கதைத்து வீணை பழகுவதற்கு ஒழுங்கு செய்துகொண்டாள். எப்போதெல்லாம் நேரம் கிடைக்கிறதோ அப்போது வீணை வகுப்புகள் நடைபெறும்.

தனது கலை ஆர்வத்தைத் தொடர்ந்து வீணையிலும் சங்கீதத்திலும் காட்டினாள் ஜெயா. நவராத்திரி என்றால் ஒரே திருவிழாதான். அம்மன் பாடல்கள் சகலகலாவல்லி மாலை, ஓம் சக்திப் பாடல்கள் யாவும் கணினியில் பதிவுசெய்து பின் பிரயாணத்தின் போது கேட்கக்கூடியதாக இசைத் தட்டுக்களில் சேமித்து வைப்பாள்.

**சமூகப்பணி**

சிறுவர் வைத்தியசாலையில் தொடர்ந்த தொண்டர் சேவை குவெல்ப் பல்கலைக்கழகப் படிப்பின் காரணமாகக் குறைந்தது. இருந்தும் கோடை கால விடுமுறையின் போது அப்பணியினைத் தொடரவேண்டியிருந்தது. மிகவும் முக்கியமான சமூகப்பணியாக அவசரகால மருத்துவ சங்கத்தைக் குறிப்பிடலாம். ஈழத்தில் அவதியுறும் இடம்பெயர்ந்த மக்களுக்கான அவசரகால மருத்துவ சேவையில் ஆரம்பகால உறுப்பினராக இயங்கிப் பலசேவைகள் புரிந்தாள். கனடிய சூழலில் குருதிக் கொடை,போன்ற பல நிகழ்ச்சிகளில் கலந்து சிறப்பித்தாள். அவசரகால மருத்துவப் பிரிவின் அங்கத்தவர் மத்தியில் பெருமதிப்பைப் பெற்றாள் என்பது வெளிப்படை. தாய் நாட்டிற்கு இலவசமாக மருந்து அனுப்புவதிலும் ஈடுபட்டு உழைத்தாள்.

**புதிய கண்டுபிடிப்பு**

பெருங்குடலின் கீழ்ப் பகுதியில் ஏற்படும் புற்று நோயினால் பலர் இறப்பதையும், அதன் ஆராய்ச்சியில் பலர் ஈடுபட்டிருப்பதையும் ஜெயா சிந்தித்தாள். இதன் ஆராய்ச்சிக்கு உதவும் முகமாக கலச்சுவரின் அமைப்பை ஆராயத்தொடங்கினாள். கலச்சுவரின் அமைப்பில் ஓர் புதிய அலகைக் கண்டு பிடித்துத் தனது சாதனையை நிலைநாட்டினாள். இரசாயனத்துறை வல்லுநர்களால் பெரிதும் பாராட்டப்பட்டதோடு, இதற்கென பல்கலைக்கழகம் ஒரு சிறு பரிசுத்தொகையைக் கொடுத்துக் கௌரவப்படுத்தியது. அத்துடன் கலாநிதிப் பட்ட மேற்படிப்பிற்காகவும் பதிவுசெய்து பாராட்டியது.

**இந்தியத் தலயாத்திரை**

தனக்குக் கிடைத்த சிறிய பரிசுத்தொகையைக் கொண்டு பெற்றோரைச் சந்தோஷப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்தியப் பயணத்தைத் தானே ஒழுங்குசெய்தாள். ஜெயாவின் மச்சாள்மாரின் குடும்பங்களும் நாமும் இந்தியாவிற்குப் புறப்பட்டோம். சென்னையில் ஒரு வாரமும் புட்டபர்த்தியில் இரு வாரங்களும் தங்கியிருந்து, திருப்பதி அண்ணாமலை போன்ற தலங்களைத் தரிசித்தோம். ஜெயா அண்ணாமலை மூலத்தானத்தில் அரைமணி நேரத்திற்கு மேல் பிரார்த்தனை செய்தது எம்மை மெய்சிலிர்க்க வைத்தது.

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் தரிசனங்களையும், அருள் உரைகளையும் கேட்டபின் மேலும் பல இடங்களைச் சுற்றிப் பார்த்தோம். இறுதியாகப் பெங்களூர் வழியாக இலண்டனை வந்தடைந்தோம். இலண்டன் விமான நிலையத்தில் ஏனையோரைப் பிரியும் போது ஜெயா சற்று சஞ்சலப்பட்டாள். இரண்டு மணி நேரத்தின் பின்னர் எமது விமானம் ரொறன்ரோ நோக்கிப் புறப்பட்டது. ஜெயா விமானத்தில் நன்றாகச் சாப்பிடவில்லை. இரண்டு முறை தேநீர் அருந்திய பின் தொண்டை நோகிறது எனக்கூறி உணவு உண்ண மறுத்து விட்டாள். தொண்டை நோ கூடுதலாக இருக்கிறது எனக்கூறி தாயாரின் மடியில் சரிந்து சிறிது நேரம் நித்திரை செய்தாள். பின்னரும் நோ அதிகரிக்கிறது என உப்பு நீர் பெற்றுக் கொடுக்கக் கொப்பளித்தாள்.

**பியர்சன் விமான நிலையம்**

விமானத்தை விட்டு இறங்கும் போது ஜெயா எழுந்துநிற்க முடியாமல் கஷ்டப்பட்டாள். விமான ஊழியரின் உதவியுடன் சக்கரவண்டி மூலம் ஜெயா வெளியே வரவேண்டியிருந்தது. தான் உடனடியாக வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டதனால் அவசரகால வாகனம் வரவழைக்கப்பட்டு எற்றோபிக்கோ வைத்திய நிலையத்திற்கு ஜெயா கொண்டு செல்லப்பட்டாள்.

வைத்தியசாலையில் சிறுநீர் குருதிப் பரிசோதனைக்கு சிபார்சு செய்யப்பட்டது. அத்துடன் எக்ஸ் றேயும் எடுக்கப்பட்டது. இரவு எட்டரை மணிக்குச் சென்ற போதும் அதிகாலை மூன்று மணியளவில் ஜெயா வீட்டிற்குச் சென்று குடும்பவைத்தியரிடம் மேற்கொண்டு சிகிச்சை பெறலாம் எனக்கூறப்பட்டது. இதனால் அதிகாலை நான்கு மணியளவில் வீடு திரும்ப வேண்டியிருந்தது. அப்போதும் ஜெயாவினால் சரியாகக் கதைக்கவும் முடியவில்லை, காரணம் தொண்டையில் பலத்த வலி ஏற்பட்டமையாகும்.

வைத்திய பரிசோதனைகளையும் முற்றாக நம்பிய நிலையில், பிரயாண அலுப்பைப் போக்குவதற்கு ஓய்வும் நித்திரையும் தான் என நினைத்தோம். காலை பத்து மணியளவில் ஜெயாவின் உடல்நிலையில் எதுவித முன்னேற்றமும் காணப்படாத நிலையில் பகல் பதினொரு மணியளவில் குடும்ப வைத்தியரிடம் சென்றோம். ஜெயாவைப் பரி சோதித்தவர் உடனடியாக கிறேஸ் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லும் படி அவசரப்படுத்தினார். சுவாசிப்பதற்குக் கஷ்டமிருப்பதாகவும்

அதற்கான சில விசேடகருவிகள் மவுண்ட் சைன்ஜ வைத்தியசாலையில் உண்டு என்றும் அவர்களாகவே அவசரகால வண்டியில் கொண்டு சென்றார்கள்.

## மவுண்ட் சைனஜ வைத்தியசாலை

கிரேஸ் வைத்தியசாலையில் இருந்து புறப்படும் போது ஜெயாவின் இரத்த அமுத்தம் குறைந்ததால் மீண்டும் சிகிச்சைக் கூடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு சரிசெய்யப்பட்டது. மவுண்ட் சைன்ஜ வைத்தியசாலை நிபுணர்கள் இரவு முழுவதும் போராடினார்கள். அதிகாலை மூன்று மணியளவில் எம்மைக் கூட்டி ஜெயாவின் நிலை மிகவும் மோசமாக பாதிப்படைந்துள்ளது என்பதை வைத்தியர்கள் தெரிவித்தனர். அத்துடன் ஜெயாவின் உடல் எப்போதும் அதிர்வுநிலையிலேயே வைக்கப்பட்டிருந்தது. வைத்தியர்கள் எல்லாவிதமான முயற்சிகளையும் செய்தவண்ணமிருந்தனர்.

நாம் கடவுளிடம் கையேந்திய வண்ணம் உயிர்ப்பிச்சை கேட்டோம். எல்லா வைத்தியர்களும் மீண்டும் ஒருதடவை கூடிக்கலந்துரையாடினர். பின்பு படிப்படியாக இயந்திரங்களை ஜெயாவின் உடலிலிருந்து அகற்றினர். ஜெயாவின் அருகே சென்று ஜெயா, ஜெயா என்று கதறினோம். ஆனால் அவள் எம்மைவிட்டுப் பிரிந்து சென்றுவிட்டாள்.

ஒரு கணம் எல்லோரும் உறைந்த கல்லாய் இருந்து விட்டோம். ஒவ்வொருவரும் வந்து தமது துயரத்தைப் பகிர்ந்து சென்றனர். வைத்தியர்களும் தமது இயலாமையைத் தெரிவிப்பது போன்று துயரத்தைப் பகிர்ந்தனர். வழமையான பிரார்த்தனைகள் நடந்தன. செய்தியை அறிந்த சுற்றத்தார் வைத்தியசாலைக்கு வந்து தமது துயரத்தைப்பகிர்ந்து சென்றனர். அதிகாலையில் எமது செல்வத்தைப் பறிகொடுத்துவிட்டு வெறும் கையோடு வீடு வந்து சேர்ந்தோம்.

## இறுதித் துயர் பகிர்வு

ஜெயாவுடன் கல்வி கற்ற மாணவர்கள் தமது ஆழ்ந்த துயரத்தைப் பகிர்ந்து கொண்டதோடு நிகழ்ச்சிகளையும் ஒழுங்கு செய்வதில் ஈடுபட்டனர். அவசரகால மருத்துவப்பிரிவினர் பலவழிகளிலும் உதவினர். இரு தினங்கள் ஜெயாவின் உடல் ஒக்டோன் மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு பல பேராசிரியர்களும் முக்கியஸ்தர்களும் ஜெயாவின் பல்வேறு குண வியல்புகளை மட்டுமல்லாது, அவரின் கண்டுபிடிப்பையும் விரிவாக

விளக்கிக் கூறினர். சிறப்பாக குவெல்ப் பல்கலைக்கழக மாணவ மாணவியரும் பேராசிரியர்களும் பங்கு பற்றினர். ஜெயாவின் உறவினர்கள் அமெரிக்கா, அவுஸ்திரேலியா, வன்கூவர் போன்ற இடங்களில் இருந்தும் வருகை தந்து இறுதித்துயர்பகிர்வில் பங்கெடுத்தனர்.

தெய்வ தரிசனத்தை நிறைவேற்றி விட்டுத் தான் வாழ்ந்த இடத் திற்கு வந்ததும் வாழ்க்கையை நிறைவு செய்து விட்ட எங்கள் இழப்பு ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும். முப்பத்தொரு நாள் கடந்த நினைவு நிகழ்வும் ஒரு தெய்வப் பிறவிக்குரியதாகவே நடந்தேறியது. அன்றைய தினம் வெளியிட்ட மலரும் சரஸ்வதியின்அட்டைப்படத்துடன் எல்லோரினது கைகளிலும் தவழ்ந்தது சிறப்பான ஒரு நிகழ்வாகும்.

வைத்தியசாலைகளின் பதிவுகள் சட்டத்துறையில் பெயர் பெற்ற ஒரு வைத்தியரின் உதவியுடன் கிறேஸ் வைத்தியசாலை, மவுண்ட் சைன்ஐ வைத்தியசாலை, ஜெயா முதலில் சென்ற ஏற்ரோபிக்கோ வைத்தியசாலை ஆகியவற்றில் இருந்து வைத்தியப் பதிவுகளைப் பெற்றோம். இப்பதிவுகளை ஆராய்ந்த போதுதான் ஏற்றோபிக்கோ வைத்தியசாலையில் ஜெயாவின் உடற் பரிசோதனை முற்றாக நிகழ்த் தப்படவில்லை என்பது தெளிவாகியது. அங்கு கடமையில் இருந்த வைத்தியர் எக்ஸ் கதிர் படத்தைப் பார்க்கவேயில்லை. கதைக்கவே முடியாமல் இருந்த நோயாளிக்கு வெறும் நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்தைக் கொடுத்து நிலைமையைச் சமாளித்து இருக்கிறார். இதன் விளைவு பாரதூரமாகி விட்டது.

வைத்தியர்களின் தொழில் சம்பந்தமானதும் தொழில் உத்தரவுப் பத்திரம் சம்பந்தமான விடையங்களைக் கவனிப்பதற்கென ஓர் அமைப்பு உள்ளது. அது தான் வைத்தியர்களுக்கான கல்லூரி. இந்த நிறுவனத்திற்கு மனுச்செய்தோம். பிரேத பரிசோதனை அறிக்கை கிடைக்கவில்லை என்று இழுத்தடித்த பின்னர் வைத்தியர் விடுமுறையில் சென்று விட்டார் என்று பதில் அனுப்பினர். பல தடவை புகார் செய்த பின்பு விசாரணை சபை கூடி சம்பந்தப்பட்ட வைத்தியரிடம் இப்புகாருக்கான பதிலைக் கோரியது. மரணவிசாரணை அதிகாரியின் அறிக்கை கிடைத்தவுடன் வைத்தியர் தனது பதிலைக் கல்லூரிக்கு எழுதினார்.

வைத்தியர் தனது பதிலில், தான் உடனே பார்க்கவில்லை எனவும் அப்போதுதான் எக்ஸ்றே படத்தைப் பார்த்ததாகவும், பார்த்தபோது அதிர்ச்சியடைந்ததாகவும், இனிமேல் இப்படிக் கவனக் குறைவாக நடக்க மாட்டேன் என்றும் நடந்த உண்மையை எழுதினார்.

இங்கு வைத்தியர் தனது பிழையை ஒப்புக் கொண்டது உண்மையில் ஒரு தெய்வச் செயலே. ஜெயா உண்மையில் ஒரு தெய்வப்பிறவியே. அத்தனை சுட்டித்தனமும் கெட்டித்தனமும் மூன்று நாட்களுள் நெருப்போடு சங்கமித்துவிட்டது. அது ஒரு தெய்வீகப் பிறவி பிறந்து தன் கடமைகளை முடித்துக் கொண்டு போவதற்கு ஆயத்தமாவதற்கு தெய்வீக யாத்திரை மேற்கொண்டு ஆத்மாவைச் சுத்தப்படுத்தி புண்ணிய ஆத்மாவாக- புனித ஆத்மாவாக தெய்வத்துவம் பெற்றுப் பறந்தவளை தெய்வப்பிறவி என்று தான் சொல்ல வேண்டும்.

*முற்றும்*

Printed by **Kumaran Printers (Pvt) Ltd.**
kumbhlk@gmail.com